விலை ரூபா: 15.00


*Registered as a Newspaper in Srilanka*

# வலம்புரி

Valampurii

பக்கங்கள்: பன்னிரண்டு

சங்கு 10 வள்ளுவர் ஆண்டு 2040 மாசி 28 வியாழக்கிழமை (12.03.2009) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 083




# பொது விழாக்களை நடத்துவதற்கு பாதுகாப்பு அமைச்சின் அனுமதி தேவை

## அரசாங்கம் அறிவிப்பு

(கொழும்பு)

பொதுமக்கள் அதிகம் பங்கு கொள்ளும் பொது விழாக்களுக்கான ஏற்பாடுகள் செய்வதற்கு முன்னர் பாதுகாப்பு அமைச்சின் அனுமதி பெறவேண்டும் என அரசாங்கம் அறிவித்துள்ளது. பாதுகாப்பு அமைச்சின் அனுமதி எடுத்தால் மட்டுமே விழாக் களை நடத்த முடியும் என்றும் அரசு தெரிவித்துள் ளது. (12ஆம் பக்கம் பார்க்க)

## புலிகளின் கரும்புலி உறுப்பினர்கள் ஊடுருவி தாக்கி வருகின்றனர்

### இராணுவப் பேச்சாளர் தெரிவிப்பு

(கொழும்பு)

வன்னியில் படையினருக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையிலான மோதல்கள் தீவிரமடைந்துள்ள நிலையில் புதுக்குடியி ருப்பு பிரதேசம் மும்முனைகளினூடாகவும் சுற்றிவளைக்கப்பட்டுள்ளதாக படைத்தரப்பு தெரிவித்துள்ளது.

இதன்போது இரு தரப்புக்கும் சேதங்கள் ஏற்பட்டுள்ளதுடன் படையினரது தீவிர முன் நகர்வையடுத்து சுமார் 37 சதுர கிலோ மீற்ற ருக்குள் புலி உறுப்பினர்கள் அனைவரும் முடக்கப்பட்டுள்ளனர் என இராணுவப் பேச்சா ளர் பிரிகேடியர் உதய நாணயக்கார தெரி வித்தார்.

விடுதலைப் புலி உறுப்பினர்கள் தமது நிலைகளைத் தக்க வைத்துக் கொள்வதற் காக படையினருக்கு எதிரான கடும் தாக்குதல் களை நடத்தி (12ஆம் பக்கம் பார்க்க)

## யாழிலிருந்து பொருட்கள் இன்று தெற்கிற்குப் பயணம்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணத்திலிருந்து வெங்காயம், பீற்றூட், இறால் மற்றும் கருவாடு ஆகியவற் றை ஏற்றிய வாகனத் தொடரணி ஒன்று இன்று தென்பகுதி நோக்கிப் புறப்படுவதாக யாழ். அரச அதிபர் க.கணேஷ் தெரிவித்தார்.

48 ஆயிரத்து 250 கிலோ வெங்காயம்,

## தெற்கின் பயங்கரவாத சம்பவங்களுக்கு வடக்குப் படை நடவடிக்கையே காரணம்

### அரசாங்கம் கூறுகிறது

1985ஆம் ஆண்டு மே மாதம் 14ஆம் திகதி சிறி மகாபோதிக்கு அருகில் இடம்பெற்ற தாக்குதலில் 125 பேர் கொல்லப்பட்டனர். மத

ளது. (12ஆம் பக்கம் பார்க்க)

இதன்போது இரு தரப்புக்கும் சேதங்கள் ஏற்பட்டுள்ளதுடன் படையினரது தீவிர முன்

காக படையினருக்கு எதிரான கடும் தாக்குதல் களை நடத்தி (12ஆம் பக்கம் பார்க்க)

# தெற்கின் பயங்கரவாத சம்பவங்களுக்கு வடக்குப் படை நடவடிக்கையே காரணம்

## அரசாங்கம் கூறுகிறது

(கொழும்பு)

வடக்கில் இடம்பெறும் பயங்கரவாதத்திற்கு எதிரான படை நடவடிக்கை காரணமாக இன்று தெற்கிலும் பயங்கரவாதச் சம்பவங்கள் இடம்பெறச் சாத்தியமுள்ளது.

இது குறித்து மக்கள் அவதானமாக இருக்கும்படி ஏற்கனவே வலியுறுத்தப்பட்டிருந்தனர் என ஊடக அமைச்சர் லக்ஸ்மன் யாப்பா அபேவர்த்தன தெரிவித்தார்.

தகவல் திணைக்களத்தில் இடம்பெற்ற ஊடகவியலாளர் மாநாட்டில் அவர் இதனைத் தெரிவித்தார். அவர் அங்கு மேலும் தெரிவித்ததாவது, மாத்தறை கொடாப்பிட்டிய பகுதியில் முஸ்லிம் பள்ளிவாசல் அருகில்இடம்பெற்ற தாக்குதலை அரசு வன்மையாகக் கண்டிக்கிறது.

1985ஆம் ஆண்டு மே மாதம் 14ஆம் திகதி சிறி மகாபோதிக்கு அருகில் இடம்பெற்ற தாக்குதலில் 125 பேர் கொல்லப்பட்டனர். மதஸ்தலங்களில் இடம்பெற்ற பத்தாவது தாக்குதல் இதுவாகும்.

இதில் பிரதேச சபைத் தலைவர், உப தலைவர் உள்ளிட்ட 15 பேர் வரை கொல்லப்பட்டுள்ளனர். பொதுமக்கள் பலர் காயமடைந்துள்ளனர்.

இவ்வாறான சமய நிகழ்வுகளின்போது மக்களுக்கு விசேட (12ஆம் பக்கம் பார்க்க)

# யாழிலிருந்து பொருட்கள் இன்று தெற்கிற்குப் பயணம்


(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணத்திலிருந்து வெங்காயம், பீற்றூட், இறால் மற்றும் கருவாடு ஆகியவற்றை ஏற்றிய வாகனத் தொடரணி ஒன்று இன்று தென்பகுதி நோக்கிப் புறப்படுவதாக யாழ். அரச அதிபர் க.கணேஷ் தெரிவித்தார்.

48 ஆயிரத்து 250 கிலோ வெங்காயம், ஆயிரத்து 300 கிலோ பீற்றூட், இறால், கருவாடு தலா 5 ஆயிரம் கிலோ என்பன இன்று அனுப்பப்படவுள்ளன. இதேவேளை நேற்று முன்தினம் ஏ-9 வீதியூடாக யாழ்ப்பாணத்துக்கு பொருட்களை ஏற்றிவந்த 11 லொறிகள் இன்று தென்பகுதிக்குச் செல்லவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ச-5)

# யுத்த வலயங்களிலிருந்து மக்களை வெளியேற அனுமதிக்கப்பட வேண்டும்

## ஜோன் ஹோம்ஸ் மீண்டும் வலியுறுத்தல்



(நியூயோர்க்)

யுத்த வலயங்களில் இருந்து இடம்பெயர்ந்து இடைத்தங்கல் முகாம்களில் உள்ள மக்கள் சுதந்திரமாக இடம்பெயர அனுமதியளிக்கப்படவேண்டுமென ஐக்கிய நாடுகளின் அவசர நிவாரண இணைப்பாளர் ஜோன் ஹோம்ஸ் தெரிவித்துள்ளார்.

நேற்று முன்தினம் நடைபெற்ற ஊடகவியலாளர் மாநாடொன்றில் கருத்துத் தெரிவிக்கும் (12ஆம் பக்கம் பார்க்க)

# பீரங்கி தளத்தை கைப்பற்றி தாக்குதல் நடத்திய புலிகள்

## கொழும்பு இணையத்தளம் தெரிவிப்பு

(கொழும்பு)

படையினரின் பல கிலோமீற்றர் தூரம் வரை தமிழீழ விடுதலைப் புலிகள் ஊடுருவியுள்ளதுடன் கிளிநொச்சிக்கு அண்மையாக இருந்த படையினரின் பீரங்கித் நிலைகளையும் கைப்பற்றியுள்ளனர் என்று கொழும்பு இணையத்தளம் செய்தி வெளியிட்டுள்ளது.

இது தொடர்பாக அதில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

படையினர் இந்தவாரம் பாரிய பின்னடைவை சந்தித்துள்ளனர். படையினரின் 58-வது டிவிசன் படையணியின் முன்னணி நிலைகளை தகர்த்தவாறு விடுதலைப் புலிகளின் 600 உறுப்பினர்கள் ஊடுருவியுள்ளனர்.

விடுதலைப் புலிகளின் இந்த பெருமெடுப்பிலான ஊடுருவல் காரணமாக ஏ-9 ஊடான படையினரின் (12ஆம் புக்கம் பார்க்க)

# 24 மணிநேரமும் ஒப்பாரிச் சத்தம்

# மரண வீடாகக் காட்சி தரும் மாத்தளன் மருத்துவமனை!

## டாக்டர் சத்தியமூர்த்தி விபரிப்பு

(முல்லைத்தீவு)

முல்லைத்தீவு மாத்தளன் வைத்திய சாலையில் 24 மணிநேரமும் உறவினர்களின் ஒப்பாரிச் சத்தம் கேட்டவண்ணமே உள்ளது. அது மரண வீடாகவே காட்சி தருகிறது.

இத்தகைய சூழ்நிலையில் மருத்துவமனைப் பணியாளர்கள் கல்நெஞ்சம் படைத்தவர்களாகவே கடமையாற்ற வேண்டியுள்ளது என கிளிநொச்சி சுகாதார சேவைகள் பணிப்பாளர் த.சத்தியமூர்த்தி வன்னி நிலைமை தொடர்பில் (12ஆம் பக்கம் பார்க்க)



சிறுவர்களை மீட்போம்

சிறுவர் ஆட்சேர்ப்பை நிறுத்து

போருக்கு சிறுவர்களை ஆட்சேர்ப்பது இலங்கை மற்றும் சர்வதேச சட்டங்களுக்கு முரணானது. இந்தப் பிரச்சினையில் இலங்கை அரசாங்கம் பூரண எதிர்ப்புக் கொள்கையைக் கடைப்பிடிக்கிறது.

புனர்வாழ்வு ஆணையாளர் தலைமையதிபதி செயலகம்

unicef

# பொதுச் சுகாதார வெளிக்கள உதவியாளர் பயிற்சிக்கு 45 பேர் தெரிவாகினர்

(யாழ்ப்பாணம்)

பொதுச் சுகாதார வெளிக்கள உதவியாளர் பயிற்சிக்கு நேர்முகப் பரீட்சை மூலம் தெரிவான 45 பேரின் பெயர் விபரங்கள் யாழ். பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளரினால் வெளியிடப்பட்டுள்ளது.

இவர்களை எதிர்வரும் 19ஆம் திகதி காலை 9 மணிக்கு பண்ணையில் அமைந்துள்ள பிராந்திய பயிற்சி நிலையத்துக்கு சமுகமளிக்குமாறு அறிவிக்கப்பட்டுள்ளது.

பயிற்சிக்கு அழைக்கப்பட்ட 45 பேரின் பெயர் விபரங்கள் வருமாறு:

வசந்குமார் அபராஜ் (59, பூநாறி வீதி, கொக்குவில் மேற்கு), சிவஞானம் விஜிதரன் (ஏழாலை மேற்கு, சவறோடை ஏழாலை), கந்தசாமி கார்த்திகேயன் (c/o இராஜேஸ்வரன் பூதவராஜர் ஒழுங்கை, திருநெல்வேலி கிழக்கு), சிவப்பிரகாசம் பிரணவன் (20/3, சுவாமியார் ஒழுங்கை, கொழும்புத்துறை), அரசரட்ணம் பிரகாஸ் (பெரிய மதவடி, உடுவில் கிழக்கு), செல்வராசா கோபிநாத் (மெமோறியல் லேன், மானிப்பாய் வடக்கு), தங்கராசா நிரூசன் (320/1 அனந்தன் வடலி வீதி, அரியாலை),

தனபாலர் சந்திரசேகர் (இல.5, புவனேஸ்வரி அம்பாள் வீதி, நல்லூர் கிழக்கு), தவராசா சரண்ராஜ் (ஆயிலி, காரைநகர்), லோகேஸ்வரன் செந்தூரன் (மாவத்தை சுதுமலை தெற்கு, மானிப்பாய்), ஜெகநாதன் சேந்தன் (புத்தூர் மேற்கு), சின்னையா கோபிநாத் (இல.4, புறூடி ஒழுங்கை, அரியாலை), பவாநந்தன் சிந்துஜன் (58 கேசாவில் பிள்ளையார் வீதி, வண்ணார்பண்ணை), தேவேந்திரன் கருணாகரன் (186/10 சேர் பொன் இராமநாதன் வீதி, திருநெல்வேலி),

விபுலானந்தராஜா உமாசுதன் (கந்தசாமி கோவிலடி, இணுவில் மேற்கு), கனகரத்தினம் கிரிதரன் (764, பருத்தித்துறை வீதி, கல்வியங்காடு), அருளம்பலம் தஜீகரன் (10/2, மூத்தவிநாயகர் வீதி, நல்லூர்), பசுவன் விஜயகுமாரன் (கைதடி தெற்கு), செல்வநாதன் சர்வாநந்தன் (22, கலைமகள் வீதி, அரியாலை மேற்கு), செல்வராசா செல்வபரன் (அளவெட்டி தெற்கு), கந்தசாமி சுதர்சன் (நவாலி வீதி, 2ஆம் ஒழுங்கை, ஆனைக்கோட்டை), செல்வநாயகம் சிவசங்கர் (E,5/1, அரச தொடர்மாடி, பம்பலப்பிட்டி), குமாரசாமி குமாரதாசன் (நீர்வளவு லேன், தும்பளை பருத்தித்துறை),

வேலாயுதன் ஜெயகாந்தன் (தொல்புரம், மேற்கு கழிபுரம்), ரட்ணவேலு செந்தூரன் (c/o கே.ரமணன் 16/1, கன்னார வீதி, நல்லூர்), நாகேஸ்வரன் மயூரன் (இருபாலை கிழக்கு), முருகையா ரஜீகரன் (சுன்னாகம்), யோ.ஜனகரன் (சில்லாலை), தர்மராஜா ராஜ் மயூரன் (மாகியப்பிட்டி, சண்டிலிப்பாய்), சுந்திரமோகன் நிரோஜன் (உடுவில் மேற்கு, சுன்னாகம்), சிவஞானம் மயூரகாசன் (பொற்பதி வீதி, கொக்குவில் கிழக்கு), சுந்தரலிங்கம் வைகுந்தன் (கரணவாய் கிழக்கு, க்ரவெட்டி), ச.சச்சூர்ஸன் (47, புகையிரத வீதி, கொக்குவில்),

சே.கோகுலன். (தும்பளை மேற்கு, தும்பளை), யூ.துராம் (மன்னார்), ஏ.அன்ரனி (மன்னார்), ஏ.சாந்தன் (வவுனியா), எஸ்.கோபிநாத் (வவுனியா), கி.தபேசன் (வவுனியா), பெ.பிரசாட் (வவுனியா), சாமிநாதன் நிர்மலகாந்தன் (வவுனியா), நா.பவநேசன் (பருத்தித்துறை ஆதார வைத்தியசாலை), மு.அருளாநந்தம் (பருத்தித்துறை ஆதார வைத்தியசாலை), நா.சுப்ரமணியம் (பருத்தித்துறை ஆதார வைத்தியசாலை), ஜீ.நிரூபன் (சுன்னாகம்). (ச)

# பெரும் கடலலையால் படகுகள் சேதம்

(வடமராட்சி)

வடமராட்சியில் அண்மைய நாட்களாகப் பெய்த மழையினையடுத்து ஏற்பட்ட கடல் கொந்தளிப்புக் காரணமாக இன்பசிட்டியில் சுமார் 100 இற்கும் மேற்பட்ட படகுகள் சேதமடைந்துள்ளன.

படகுகள் கரையில் கட்டப்பட்டிருந்த போதிலும் கடும் அலை காரணமாக படகுகள் சேதமடைந்ததாக தெரிவிக்கப்பட்டது.

இதேவேளை கடும் காற்று வீசிக் கொண்டிருந்தபோது கடலுக்குச் சென்ற இரண்டு மீனவர்கள் படகுகவிழ்ந்த நிலையில் நீந்திக் கரை சேர்ந்துள்ளனர்.

அவர்களின் உடைமைகளும் கடலில் வீழ்ந்து விட்டதாகவும் தெரிவிக்கப்பட்டது. (ச-10)

# அமைச்சர் விஜயசேகரவை ஜனாதிபதி பார்வையிட்டார்

(கொழும்பு)

அக்குரஸ்ஸ கொடாப்பிட்டிய தற்கொலைக் குண்டுத் தாக்குதலில் படுகாயமடைந்த அமைச்சர் மஹிந்த விஜயசேகரவுக்கு வழங்கப்பட்டிருந்த செயற்கைச் சுவாசம் அகற்றப்பட்டுள்ள போதிலும் அவரது உடல் நிலை குறித்த சரியான தகவலை வெளியிட முடியாது என கொழும்பு தேசிய வைத்தியசாலை பணிப்பாளர் ஹெக்டர் வீரசிங்க தெரிவித்தார்.

அமைச்சரது தலையின் இடது பக்கத்தில் பலமான காயம் ஏற்பட்டுள்ளதாகவும் அவருக்கு நான்கு மணி நேர சத்திர சிகிச்சை மேற்கொள்ளப்பட்டதாகவும் அவர் கூறினார்.

அதேவேளை அமைச்சர் மஹிந்த விஜயசேகரவைப் பார்வையிடுவதற்காக ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ நேற்று முன்தினம் இரவு கொழும்பு தேசிய வைத்தியசாலைக்கு திடீரென விஜயம் செய்திருந்தார்.

அமைச்சரின் உடல் நிலைமைகளை நேரில் பார்வையிட்ட ஜனாதிபதி, உறவினர்களுக்கு ஆறுதலும் கூறினார். (ச-5)

# ஆயர்கள் குழு செட்டிகுளத்துக்கு விஜயம்

மன்னார் மறைமாவட்ட ஆயர் உட்பட 6 கத்தோலிக்க ஆயர்கள் நேற்று செட்டிக்குளத்தில் இடம் பெயர்ந்த மக்கள் தங்க வைக்கப்பட்டுள்ள சில நலன்புரி நிலையங்களுக்கு விஜயம் செய்தனர்.

மக்கள் தங்கியுள்ள நலன்புரி நிலையங்களுக்கு செய்து கொடுக்கப்பட்டுள்ள வசதிகள் குறித்து இவர்கள் நேரில் அவதானித்தனர். மேலும் ஆயர்கள் உள்ளிட்ட குழுவினர் வவுனியா நகரில் அமைக்கப்பட்டுள்ள நலன்புரி நிலையங்களையும் காயங்களுக்குள்ளான நிலையில் வவுனியா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ள மக்களையும் பார்வையிட்டுள்ளனர். காலி, அனுராதபுரம், சிலாபம், இரத்தினபுரி, மன்னார், கண்டி ஆகிய மாவட்டங்களின் ஆயர்களே இந்த விஜயத்தை மேற்கொண்டிருந்தனர். (ச-3)

# நால்வர் சரண்

விடுதலைப்புலி உறுப்பினர்கள் நால்வர் ஓமந்தை சோதனைச் சாவடியில் சரணடைந்துள்ளனர் என தேசிய பாதுகாப்புக்கான ஊடக மத்திய நிலையம் தெரிவித்துள்ளது. நேற்று முன்தினம் சரணடைந்த இந்த விடு தலைப்புலி உறுப்பினர்கள் வவுனியா பொலி ஸாரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளதோடு அவர்கள் 25,24 மற்றும் 17 ஆகிய வயதுடையவர்கள் என பொலிஸார் தெரிவித்தனர். அவர்களை நேற்று நீதிமன்றத்தில் ஆஜர் படுத்துவதாக பொலிஸ் ஊடகப் பேச்சாளர் தெரிவித்தார். (ச-5)

# இடம்பெயர்ந்த மக்களைச் சந்திக்க அமைச்சர் டக்ளஸ் வன்னி செல்வார்

## சமூகசேவைகள் அமைச்சு தெரிவிப்பு

(கொழும்பு)

வடமாகாண விசேட செயலணித் தலைவரும் சமூக சேவைகள் மற்றும் சமூக நலத்துறை அமைச்சருமான டக்ளஸ் தேவானந்தா வன்னிப் பிராந்தியத்திற்கு விரைவில் செல்லவுள்ளதாக அமைச்சு தெரிவித்துள்ளது.

தற்போது இடம் பெற்றுக் கொண்டிருக்கும் மோதல்கள் காரணமாக பல்லாயிரக் கணக்கான மக்கள் இடம்பெயர்ந்து வவுனியாவில் வாழ்ந்து கொண்டிருக்கும் நிலையிலும் அப்பிரதேசத்தில் மக்கள் நலத்திட்ட பணிகளை முன்னெடுத்துச் செல்லும் முகமாகவும் அமைச்சரின் பயணம் அமையவுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

வன்னியிலிருந்து இடம்பெயர்ந்து வவுனியாவில் தங்கியிருக்கும் மக்களின் நலன்கள் தேவைகள் தொடர்பாக தொடர்ச்சியான கோரிக்கைகள் அரச அதிகாரிகளினாலும் அரசசார்பற்ற நிறுவனங்களினாலும் பொதுமக் களினாலும் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவுக்கு தொடர்ச்சியாக தெரியப்படுத்தப்பட்டுக் கொண்டிருக்கும் நிலையில் அமைச்சர் வன்னிக்குச் செல்லவுள்ளார்.

வன்னிப்பிராந்தியத்தில் தொடர்ச்சியாக அமைச்சர் தங்கியிருக்கும் காலப்பகுதியில் வன்னியில் இடம் பெற்றுக் கொண்டிருக்கும் மோதல்கள் காரணமாக இடம் பெயர்ந்து வந்து அரசாங்கத்தினால் பராமரிக்கப்பட்டு வரும் பல்லாயிரக்கணக்கான பொதுமக்கள் தங்கியிருக்கும் நலன்புரி முகாம்கள் மற்றும் அதனோடிணைந்த தேவைகள் குறித்து விசேட கவனம் செலுத்துவார் எனத் தெரிவிக் கப்பட்டுள்ளது. (ச-5)

# சரணடையும் விடுதலைப் புலி உறுப்பினர்களுக்கு புனர்வாழ்வின் மூலம் ஒளிமயமான எதிர்காலம்!

## பலாலி படைத்தலைமையகம் தெரிவிப்பு

விடுதலைப்புலிகள் இயக்கத்தை விட்டு விலகி அல்லது தப்பி வரும் இயக்க உறுப்பினர்களின் பாதுகாப்பைக் கருத்தில் கொண்டு பாதுகாப்புடன் கூடிய புனர்வாழ்வு முகாம்கள் நிறுவப்பட்டன. அவ்வாறு நிறுவப்பட்ட புனர்வாழ்வு முகாம்களில் ஒன்று யாழ்ப் பாணம் தெல்லிப்பழை பிரதேசத்தில் ஆரம்பிக்கப் பட்டதுடன்,

தற்போதைக்கும் அம்முகாம் மிக சிறப்பாக இயங்கிவருகிறது. கடந்த காலங்களில் இயக்கத்தினை விட்டு தப்பிவரும் உறுப்பினர்களின் எண்ணிக்கை அதிகரித் துக் காணப்படுவதுடன் இவ்வாறு யாழ். குடா நாட்டிற்கு தப்பி வந்து சரணடையும் இயக்க உறுப்பினர்களுக்கு இம் முகாமில் வெற்றிகரமாக புனர்வாழ்வு அளிக்கப்படுகிறது.

இவர்களுள் இயக்கத்தின் மீது வெறுப்படைந்த நேரடி உறுப்பினர்களும் இயக்கத் திற்கு பல்வேறு முறைகளில் உதவி, ஒத்து ழைப்புக் களை வழங்கியவர்களும் அடங்குவார்கள் என பலாலி படைத்தலைமையகம் தெரிவித்துள்ளது.

இது தொடர்பாக பலாலி படைத் தலைமையகம் வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பு வருமாறு:

இயக்க உறுப்பினர்கள், இயக்கத்தினால் விடுக்கப்படும் மரண அச்சுறுத்தலில் இருந் தும் தப்பித்துக் கொள்வதற்காக ஐ.நா. அமைப்புடன் தொடர்புடைய செஞ்சிலுவைச் சங்கம் அல்லது மனித உரிமைகள் ஆணைக் குழு போன்ற அமைப்புக்கள் ஊடாக பாது காப்புப் படையினர் அல்லது பொலிஸாரிடம் சரணடைவதுடன் பின்னர் அவர்கள் நீதிமன்றத்தில் நிறுத்தப்பட்டு நீதிமன்ற ஆலோசனையின்படி புனர்வாழ்வு முகாம்களிற்கு அனுப்பப்படுகின்றனர்.

ஆகவே நீதிமன்றத்தின் ஊடாக சரணடையும் இவர்களின் பாதுகாப்பு சந்தேகத்திற்கு இடமின்றி உறுதிப்படுத்தப்படுவதுடன் எவ்வித அச்சுறுத்தலுக்கோ, பலவந்தப் படுத்தலுக்கோ, தாக்குதலுக்கோ, துன்புறுத்தலுக்கோ உட்படுவதில்லை.

அத்துடன் அவர்கள் இரண்டு வாரங்களுக்கு ஒரு முறை நீதிமன்றத்தில் ஆஜர் படுத்தப்படவேண்டும் என்பதுடன் அவர்களின் ஒழுக்கம் மற்றும் அவர்கள் துன்புறுத்தலுக்கு உட்படுத்தப்படுகின்றனரா? என்பது பற்றிய விசாரணைகள் நீதிமன்றத்தால் மேற்கொள்ளப்படும்.

இந்தப் புனர்வாழ்வு முகாம்களில் புனர்வாழ்வு பெறும் முதியோர், இளைஞர்கள், சிறார்கள் என அனைவருக்குமே மனித நேயத்துடன் உபசரிக்கப்படுவதுடன் அவர்களின் உணவு, ஆடைகள், இருப்பிடம் மருத்துவ வசதி, நீர், மலசல கூட வசதி என அனைத்து அடிப்படை வசதிகளும் உச்ச நிலையில் செய்துகொடுக்கப் பட்டுள்ளதுடன் மற்றும் அவர்களின் நலன்புரி நடவடிக்கைகளும் உயர்தரத்தில் அமைந்துள்ளன.

தமது மதவழிபாடுகளுக்காக வழிபாட்டு இடங்களும் விளையாட்டுத் தகைமையை மேம்படுத்திக் கொள்ள விளையாட்டுக்களில் ஈடுபடவும் பொழுது போக்கிற்கான வசதிகளும் ஏற்படுத்திக் கொடுக்கப்பட்டுள்ளன.

இவற்றைத்தவிர இவ்வாறு சரணடையும் இளைஞர், யுவதிகளினதும் சிறார்களினதும் எதிர்காலத்தை ஒளிமயமானதாக்கும் பொருட்டு மேலும் பல நடவடிக்கைகள் மேற்கொள்ளப் பட்டுள்ளதுடன் தொழில் நுட்ப பயிற்சியும் கல்வியும் இவற்றில் பிரதான இடம் வகிக்கின்றன.

இதன்படி யாழ். தொழில் நுட்பக் கல்லூரியின் ஒத்துழைப்புடன் விசேட பயிற்சி நெறிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

இவற்றுள் மரவேலை, வீட்டு மின்னிணைப்பு மற்றும் மின்னியல், கணனி, முடிதிருத்தல், தகவல் தொழில் நுட்பம் மற்றும் ஆங்கிலம் உட்பட மேலும் பல பயிற்சி பாட நெறிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

மற்றும் தாம் விரும்பிய ஒரு பயிற்சியையோ அல்லது பல பயிற்சிகளையோ பெற்று தொழில் துறையில் தாம் விரும்பியவாறு ஈடுபடுவதற்கான வசதிகளும் செய்துகொடுக் கப்பட்டுள்ளன.

இப்பயிற்சிகளை திறமையாக நிறைவு செய்த சுமார் 17 பேர் வெளிநாட்டு வேலை வாய்ப்புக்களைப் பெற்றுச் சென்று தமது எதிர்கால வாழ்வை ஒளிமயமானதாக்கி கொண்டுள்ளனர்.

அத்துடன் மேலும் பலர் பயிற்சிகளை நிறைவு செய்துள்ளதுடன் அவர்களுக்கும் மிக விரைவில் உள்நாட்டு, வெளிநாட்டு வேலை வாய்ப்புக்கள் கிடைக்க இருக்கின்றன. கல்வி கற்கும் வயதுடையவர்களுக்கு அவர்களின் வயதின் அடிப்படையில் கல்வி கற்பதற்கான சந்தர்ப்பம் ஏற்படுத்திக் கொடுக் கப்பட்டுள்ளது.

இவையாவும் யூனிசெவ், மனித உரிமைகள் அமைப்பு உட்பட ஐ.நா. அமைப்புடன் தொடர்புடைய மேலும் பல அமைப்புக்களின் மேற்பார்வையில் மேற் கொள்ளப் படுகின்றன.

இங்கு புனர்வாழ்வு நடவடிக்கைகள் புனர்வாழ்வுப் பணிப்பாளர் அலுவலகத்தின் நிதியுதவி மற்றும் ஆலோசனைகளும் எப்போதும் கிடைத்துவருவதுடன் அவர்களின் கண்காணிப்புக்களும் இடம் பெறுகின்றன.

யுத்தத்திற்குள் உள்வாங்கப்பட்டிருக்கும் இளைஞர், யுவதிகளான நீங்களும் சின்னஞ் சிறார்களும் தொடர்ந்தும் வாழ வேண்டும். நாட்டைப் பொறுப்பேற்கவுள்ள நீங்கள் அவ்வாறு அழிக்கப்படவேண்டியவர்கள் அல்லர். அத்துடன் உங்கள் பெற்றோர் உற்றார், உறவினர்கள், சகோதர, சகோதரிகள் நீங்கள் வரும்வரை வழிபார்த்துக் காத்திருக்கின்றனர்.

மீண்டும் அவர்களுடன் ஒன்றிணைந்து வாழ்ந்து உங்கள் எதிர்காலத்தை வெற்றிகரமாக மாற்றிக்கொள்ள உங்களிற்கு சந்தர்ப்பம் உள்ளது. அதற்காக நீங்கள் செய்யவேண்டியது இது ஒன்றே. உங்கள் கைகளில் பலவந்தமாக திணிக்கப்பட்டிருக்கும் ஆயுதத்தை கைவிடுங்கள். வந்து சரணடையுங்கள். ஆயுதங்களுடனோ இல்லாமலோ வந்து உங்களிற்கு சரணடைய முடியும். அதற்கான சந்தர்ப்பம் மீதமுள்ளது.

உங்கள் எதிர்காலத்தை வளப்படுத்தி சிறந்த வாழ்க்கையை மேற்கொள்ள தேவையான அனைத்தும் மேற்கொள்ளப்பட்டுள்ளதுடன் உங்கள் பாதுகாப்பையும் நாம் பொறுப்பேற்கின்றோம் என்றுள்ளது. (எ)

# இன்று ஒரு தகவல்

## பரிவு

"இன்றைக்கு உலகத்தில் இருக்கக்கூடிய பல வகையான துன்பங்களுக்கு அடிப்படையான காரணம் என்ன என்று தெரியுமா?" என்று கேட்டார் ஒருவர்.

"என்ன?" என்றார் இன்னொருவர்.

"ஒரு மனிதன் மேல் இன்னொரு மனிதனுக்கு இருக்க வேண்டிய பரிவு இல்லாமல் போய்விட்டது. அதுதான் துன்பத்துக்குக் காரணம். பணத்தினால் கிடைக்காத மகிழ்ச்சியும் ஊக்கமும் பரிவினால் மக்களுக்குக் கிடைக்கிறது" என்றார்.

அதற்கு டால்ஸ் டாய் வாழ்க்கையில் நடந்த ஒரு நிகழ்ச்சியை உதாரணமாகச் சொன்னார்.

ஒரு சமயம்... டால்ஸ் டாய் மொஸ்கோ நகரத்தின் 24 ஆவது வீதியில் நடந்து போய்க் கொண்டிருந்தாராம்.

அப்பொழுது ஒரு பிச்சைக்காரன் அவர் எதிரில் வந்து, 'ஐயா... பிச்சை போடுங்கள்" என்றான்.

டால்ஸ் டாய் இளகிய மனமுடையவர். உடனே அந்தப் பிச்சைக்காரனுக்கு ஏதாவது கொடுக்க வேண்டுமென்று நினைத்தார். தன்னுடைய சட்டைப் பைக்குள் கையை விட்டார். ஒரு சதம் கூட இருக்கவில்லை.

உடனே அந்தப் பிச்சைக்காரனைப் பார்த்து, "தம்பி! கையில் பணமில்லையே!" என்றார்.

இதைக் கேட்டதும் பசியால் வாடிப் போயிருந்த அந்தப் பிச்சைக்காரன் முகத்தில் ஒரு மலர்ச்சி! "ஐயா... நீங்கள் பிச்சை போடவில்லையென்றாலும் பரவாயிலலை. இப்பொழுது என் மனம் நிறைந்து விட்டது. மகிழ்ச்சியாக இருக்கிறது" என்றார்.

டால்ஸ் டாய் ஆச்சரியத்துடன் அவனுடைய முகத்தைப் பார்த்தார். அவன் சொன்னான்.

"ஐயா, நீங்கள் பிச்சை கொடுப்பதை விட ஒரு பெரிய உதவியை இன்று எனக்கு செய்து விட்டீர்கள். அதாவது என்னை தம்பி என்று கூப்பிட்டீர்களே... அது போதும்!" என்றான்.

தன்னைக் கொஞ்சமும் ம்திக்காத இந்த உலகத்தில் தன்னையும் ஒரு மனிதனாக மதித்து தம்பி என்று உறவு கொண்டாடிய டால்ஸ் டாய் மேல் அந்தப் பிச்சைக்காரனுக்கு அளவு கடந்த மதிப்பு ஏற்பட்டது.

பணத்தினால் கிட்டாத மகிழ்ச்சியும் ஊக்கமும் பரிவினால் மக்களுக்குக் கிடைத்துவிடும் என்பதற்கு இந்த சம்பவம் ஒரு நல்ல உதாரணம்.

இந்தப் பரிவு மனிதனிடம் இன்றைக்கு இம்மியளவும் இல்லை. அதனால் தான் துன்பப்படுகிறான்.

டால்ஸ் டாய்க்கு ஏற்பட்ட பரிவுணர்ச்சி நமக்கும் ஏற்பட வேண்டுமானால் நாம் என்ன செய்ய வேண்டும்?

தினமும் கொஞ்சநேரமாவது நம்மைப் பற்றிய சிந்தனையிலிருந்து விடுவித்துக் கொண்டு, மற்றவர்களுடைய இதயத்தில் அமர்ந்து அவர்களுடைய கண்கள் வழியாக உலகத்தைப் பார்க்க முயற்சி செய்ய வேண்டும். பலபேர் அப்படிப் பார்த்திருக்கிறார்கள்.

அல்பேர்ட் ஷ்வைட்ஸர் அமெரிக்காவுக்குப் போயிருந்தார். அப்பொழுது அவரிடம் படித்த மாணவர் ஒருவர் அவரைச் சந்தித்தார். என்னுடன் ஹோட்டலுக்கு வரவேண்டும் என்று பணிவாகக் கேட்டார்.

இவரும் சம்மதித்தார். அங்கு போய் உட்காந்தார்கள். ஷ்வைட்ஸருக்காக ஒரு ஸ்பெஷல் கேக் வரவழைக்கப்பட்டிருந்தது. கேக்கை வெட்டுவதற்கு முன் ஷ்வைட்ஸர் அங்கே உள்ளவர்கள் எத்தனைபேர் என்று எண்ணிப் பார்த்தார்.

9 பேர் இருந்தார்கள். உடனே இவர் 10 துண்டுகள் வெட்டினார். 9 பேர் தானே இருக்கிறோம். எதற்காக 10 துண்டு என்று எல்லோரும் யோசித்தார்கள்.

அப்போது அல்பேர்ட் ஷ்வைட்ஸர் சொன்னார்.

"ரொம்பப் பிரியமாக இந்தக் கேக்கை இங்கே கொண்டு வந்து வைத்த பணிப் பெண்ணுக்கு இந்த பத்தாவது துண்டு" என்றார்.

இதுதான் பரிவு. மனிதன் மனிதனுக்கு காட்ட வேண்டிய பரிவு. இப்பொழுதெல்லாம் ஒரு மனிதன் இன்னொரு மனிதனை எப்படி எடை போடுகிறேன் தெரியுமா?

ஒரு ரயில்வே ஸ்டேஷன். ஒரு ஆள் வந்தான். அங்கு நின்று கொண்டிருந்தவரைப் பார்த்து,

"சேர்... உங்களுக்கு மதுப்பழக்கம் உண்டா?" என்று கேட்டான்.

"அறவே கிடையாது" என்றார் அவர்.

"சரி... அப்படியானால் இந்த மதுப் போத்தல்களை கொஞ்ச நேரம் வைத்துக் கொள்ளுங்கள். நான் போய் டிக்கற் வாங்கிக் கொண்டு வந்து விடுகிறேன்" என்று அதைக் கொடுத்து விட்டு நம்பிக்கையுடன் நடந்து சென்றான்.

*தென்கச்சி கோ சுவாமிநாதன்*

# சாரதி அனுமதிப் பத்திரம் பெறுவதற்கு புதிய நடைமுறை

## யாழில் 23 ஆம் திகதி முதல் அறிமுகம்

(யாழ்ப்பாணம்)

சாரதி அனுமதிப்பத்திரம் பெறுவதற்கான புதிய நடைமுறை இம் மாதம் 23 ஆம் திகதி முதல் யாழ். மோட்டார் போக்குவரத்து திணைக்களத்தால் அறிமுகப்படுத்தப்படவுள்ளதாக யாழ். மோட்டார் போக்குவரத்து உதவி ஆணையாளர் வ. பத்மநாதன் அறிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் வெளியிட்டுள்ள செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

சாரதி அனுமதிப்பத்திரம் பெறுவதற்கான புதிய நடைமுறை அறிமுகப்படுத்தப்படவிருப்பதனால் தற்போது நடைமுறையில் உள்ள சாரதி அனுமதிப் பத்திரம் பெறுவதற்கான வழங்கப்பட்ட விண்ணப்பப் படிவங்கள் நாளை வெள்ளிக்கிழமை வரை இத் திணைக்களத்தால் ஏற்றுக் கொள்ளப்படும். அடுத்த வாரம் முதல் பழைய விண்ணப்பப் படிவங்கள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது.

மேலும், புதிய நடைமுறைக்கு அமைவாக அறிமுகப்படுத்தப்படவுள்ள விண்ணப்ப படிவங்கள் யாழ். மோட்டார் போக்குவரத்து திணைக்களத்தினால் எதிர்வரும் 23 ஆம் திகதி முதல் சாரதி அனுமதிப் பத்திரம் பெற்றுக்கொள்ளவிருக்கும்விண்ணப்பதாரிகளுக்கு வழங்கப்படும் என அதில் குறிப்பிடப்பட்டுள்ளது. (ஓ-5)

# இந்திய மருத்துவக் குழு சேவைக்காலத்தில் எந்தவொரு சவாலையும் எதிர்கொள்ளத் தயார்

## இந்திய உயர்ஸ்தானிகர் தெரிவிப்பு

இந்திய மருத்துவக் குழுவினர் தமது சேவைக்காலத்தில் எந்தவொரு சவாலையும் எதிர்கொள்ளத் தயாராகவிருப்பதாக இலங்கைக்கான இந்திய உயர்ஸ்தானிகர் அலோக் பிரசாத் தெரிவித்துள்ளார்.

இதேவேளை, இலங்கைக்குச் சென்றிருக்கும் இந்திய மருத்துவக் குழுவினரை சுகாதார அமைச்சர் நிமால் சிறிபால டி சில்வா நேற்று புதன்கிழமை சந்தித்துள்ளார்.

இதன்போது 70 மில்லியன் பெறுமதியான மருந்துப் பொருட்கள் மற்றும் மருத்துவ உபகரணங்களை நிமால் சிறிபால டி சில்வாவிடம் அலோக் பிரசாத் கையளித்தார்.

இந்த சந்திப்பின் போது இலங்கைக்கான இந்திய உயர்ஸ்தானிகர் அலோக் பிரசாத் மற்றும் சுகாதார அமைச்சின் செயலாளர் அத்துல ஹாந்தலியனகே ஆகியோரும் கலந்து கொண்டிருந்தனர்.

இதற்கிடையில் இந்திய மருத்துவக் குழுவினருக்கான வைத்தியசாலையொன்று புல்மோட்டைப் பகுதியில் அமைத்துக் கொடுக்கப் படவிருப்பதுடன் இந்த மருத்துவக் குழுவினர் நாளை வெள்ளிக்கிழமை புல்மோட்டைக்கு அனுப்பிவைக்கப் படுவார்களெனவும் தெரிய வருகிறது. (ஓ-5)

# நலன்புரி நிலையங்களில் சோளன் சோயா மா சத்துணவு வழங்கல்

அண்மையில் இடம் பெயர்ந்து மிருசுவில், கொடிகாமம் நலன்புரி நிலையங்களில் தங்கியிருக்கும் கர்ப்பிணிகள், பாலூட்டும் தாய்மார்கள் மற்றும் 05 வயதுக்குட் பட்ட குழந்தைகளது பேஷாக்கை மேம்படுத்தும் பொருட்டு சோளம் சோயா மா சத்துணவு சாவகச்சேரி சுகாதார வைத்திய அதிகாரி அலுவலகத்தினர் வழங்கி வருகின்றனர்.

உலக உணவுத் திட்டத்தினால் வழங்கப்படும் இச் சோளம் சோயா மா உடனடி உணவாக பயன்படுத்தும் பொருட்டு தயாரித்து வழங்கப் படுகிறது.

சாவகச்சேரி, மானிப்பாய் சுகாதார வைத்திய அதிகாரி பிரிவு சுகாதாரத் தொண்டர்களது உதவியுடன் இம்மா கலவையினை ஆனைக்கோட்டை பூபதி வெதுப்பகத்தினர் மானிப்பாய் வைத்திய அதிகாரி பணிமனை மேற்பார்வையுடன் உடன் உண்ணக் கூடியவாறு பதப் படுத்தி உதவியுள்ளனர்.

மேலும் இதற்கு வேண்டிய வசதிப் படுத்தல்களை ஐக்கிய நாடுகள் உலக உணவுத் திட்ட யாழ் அலுவலகத்தினர் மேற்கொண்டதாகவும் மேலும் இவ்வாறான உதவிகள் பல தரப்பினருடமிருந்தும் எதிர்பார்க்கப் படுவதாக சாவ. சுகாதாரப் பணிமனையினர் அறிவித்துள்ளனர்.(ஓ-29)

# திருநெல்வேலி சந்தையின் புதிய கட்டடம் யூனில் பாவனைக்கு

(யாழ்ப்பாணம்)

நல்லூர் பிரதேச சபையினரால் திருநெல்வேலி நவீன சந்தை வேலைகள் துரிதகதியில் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. எதிர்வரும் ஜீன் மாதமளவில் சந்தையின் ஒரு பகுதி திறக்கப்பட்டு பாவனைக்கு விடப்படும்.

இதனால் தற்போது மரக்கறி வியாபாரிகள், மற்றும் பொதுமக்கள் எதிர்கொள்ளும் அசௌகரியங்கள் தீர்க்கப்படும் எனவும் அதுவரை சந்தை புனரமைப்புக்காக பிரதேச சபைக்கு பூரண ஒத்துழைப்பு வழங்குமாறு நல்லூர் பிரதேச சபை செயலாளர் எம். ஜே. சாந்தசீலன் கேட்டுள்ளார். (ஓ-36)

# இராசி பலன்

12.03.2009
(மாசி 28, வியாழக்கிழமை)
பிரதமை முற்பகல் 7.36 மணிவரை
உத்தரம் முற்பகல் 8.11 மணிவுரை
இராகுகாலம் 1.52 -3.22 மணிவரை
சுபநேரம் 7.52-9.22 மணிவரை
காரைநகர் மணற்காடு மாரி அம்மை கொடி

| | |
|---|---|
| மேடம் | தடைப்பட்ட காரியம் கைகூடும், தேகநலன், தனலாபம், சத்துரு ஜெயம். |
| இடபம் | வியாபார விருத்தி, குடும்பக் கவலை, முயற்சி தாமதம், கௌரவக்குறைவு. |
| மிதுனம் | கல்வியில் ஆர்வம், ரோக பயம், காரியதாமதம், சுபசெலவு. |
| கடகம் | அன்னியர் சந்திப்பு, காரிய அனுகூலம், பொருள் சேர்க்கை, வாக்கு மேன்மை. |
| சிங்கம் | வீண் விவாதம், மரியாதைக் குறைவு, காரிய தாமதம், தன விரயம். |
| கன்னி | ஆழ்ந்த சிந்தை, சயன சுகம், புதிய பொருள் சேர்க்கை, நல்ல முயற்சி. |
| துலாம் | காரிய அலைச்சல், சுபசெலவு, திடீர் நன்மை, உறவினர் சந்திப்பு. |
| விருச்சிகம் | குடும்ப மகிழ்ச்சி, காரிய நன்மை, பொருள் சேர்க்கை, பெருமையடைதல். |
| தனுசு | அதிக பிரயாசை, சுபநிகழ்வு, தன்னம்பிக்கை, முயற்சி கைகூடும். |
| மகரம் | எதிர்பாராத செலவு, புதிய திட்டமிடல், பெரியோர் சந்திப்பு, கட்டுப்பாடு. |
| கும்பம் | காரிய தடங்கல், வாகன பயம், போசன சுகம், மனக்கவலை. |
| மீனம் | களஸ்திர நன்மை, முயற்சி கைகூடும், தனலாபம், நண்பர்கள் சந்திப்பு. |

வளவன்

# குடாநாட்டு சந்தைகளில் நேற்றைய விலை விபரம்

| மரக்கறி வகைகள் 1 Kg | திருநெல்வேலி ரூபா | யாழ்ப்பாணம் ரூபா |
|---|---|---|
| கத்தரிக்காய் | 50 | 60 |
| உருளைக்கிழங்கு | 80 | 100 |
| பச்சைமிளகாய் | 70 | 80 |
| தக்காளி | 50 | 60 |
| அவரை | 15 | 25 |
| மரவள்ளிக்கிழங்கு | 65 | 70 |
| கோவா | 20 | 30 |
| கரட் | 45 | 55 |
| பூசணி | 40 | 50 |
| புடோல் | 20 | 30 |
| வாழைக்காய் | 60 | 80 |
| சின்ன வெங்காயம் | 30 | 40 |
| பெரிய வெங்காயம் | 40 | 50 |
| பாகற்காய் | 30 | 40 |
| வெண்டிக்காய் | 30 | 40 |
| க்ரணைக் கிழங்கு | 20 | ,30 |
| பயிற்றங்காய் | 30 | 40 |
| லீக்ஸ் | 100 | 110 |
| போஞ்சி | 40 | 50 |
| கீரை - 1 பிடி | 15 | 20 |
| தேசிக்காய் | 100 | 120 |
| தேங்காய் (ஒன்று) | 35 | 40 |

# கூட்டுறவு அமைப்புக்கள் மூலம் பயன்தரும் மரக்கன்றுகளை நாட்ட நடவடிக்கை

(யாழ்ப்பாணம்)

குடாநாட்டில் கூட்டுறவு அமைப்புக்கள் மூலம் பயன்தரும் மரக்கன்றுகள் நடப்பட விருக்கின்றன. சித்திரைப் புத்தாண்டு தினத்தன்று தென்னை, பனை,மா,பலா போன்ற பயன்தரும் மரக்கன்றுகளை நட்டு வளத்தைப் பெருக்க முன்வருமாறு யாழ்.மாவட்ட கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர் சகல கூட்டுறவு அமைப்புக்களுக்கும் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

கூட்டுறவு அமைப்பினால் ஆரம்பிக்கப்பட்டுள்ள இத்திட்டத்தில் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்கள் தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவு சங்கங்கள் உட்பட அனைத்து கூட்டுறவு அமைப்புக்களும் இணைந்து ஒத்துழைப்பு வழங்குமாறு ஆணையாளர் பொ.சிவலிங்கம் தெரிவித்துள்ளார்.

கடந்த ஆண்டு நவம்பர் மாதம் வீசிய நிஷா புயல்காற்றினாலும் மழைவெள்ளத்தினாலும் பயன்தரும் மரங்கள் அழிந்து போயுள்ளன. இவற்றை ஈடுசெய்யும் வகையில் ஒவ்வொரு கூட்டுறவுச் சங்கமும் குறைந்தது 50 பயன்தரும் மரக்கன்றுகளை நட்டுப் பாதுகாத்து எமது வளத்தைப் பெருக்க முன்வர வேண்டும். இத்திட்டத்தின் மூலம் சுமார் 3000 பயன்தரும் மரக்கன்றுகளை நட முடியுமென்று ஆணையாளர் மேலும் தெரிவித்துள்ளார். (ஓ-6)

# நல்லூர் பிரதேச செயலக கழகங்களுக்கிடையே நடத்தப்பட்ட விளையாட்டுப் போட்டி முடிவுகள்

(யாழ்ப்பாணம்)

நல்லூர் பிரதேச செயலகத்துக்குட்பட்ட பதிவு செய்யப்பட்ட விளையாட்டுக் கழகங்களுக்கிடையே நடாத்தப்பட்ட விளையாட்டுப் போட்டி முடிவுகளில் முதல் மூன்று இடங்களைப் பெற்ற கழகங்களின் பெயர் விபரங்கள் வருமாறு,

**ஆண்களுக்கான துடுப்பாட்டப் போட்டி**

முத்துத்தம்பி மத்திய விளையாட் டுக் கழகம், அரியாலை ஐக்கிய விளையாட்டுக் கழகம், காந்தி விளையாட்டுக் கழகம்.

***பெண்களுக்கான துடுப்பாட்டப் போட்டி***

அரியாலை ஐக்கிய வி.க, கொக்குவில் கே.சி.சி.சி. வி.க, ராஜா வி.க.

***பெண்களுக்கான வலைப்பந்தாட்டப் போட்டி***

கொக்குவில் கே.சி.சி.சி. வி.க, அரியாலை ஐக்கிய வி.க, அரி யாலை ஸ்ரீ கலைமகள் வி.க.

***ஆண்களுக்கான உதைப்பந்தாட்டப் போட்டி***

கொக்குவில் கே.சி.சி.சி. வி.க, முத்துத்தம்பி மத்திய வி.க.

***ஆண்களுக்கான கரப்பந்தாட்டப் போட்டி***

அரியாலை ஐக்கிய வி.க, நண்பர்கள் வி.க.

***பெண்களுக்கான கரப்பந்தாட்டப் போட்டி***

அரியாலை ஐக்கிய வி.க, கொக்குவில் கே.சி.சி.சி. வி.க.

***ஆண்களுக்கான எல்லே போட்டி***

முத்துத்தம்பி மத்திய வி.க, கொக்குவில் கே.சி.சி.சி. வி.க, காந்தி வி.க.

***பெண்களுக்கான எல்லே போட்டி***

கொக்குவில் கே.சி.சி.சி.வி.க, அரியாலை ஐக்கிய வி.க.

***பெண்களுக்கான கபடி போட்டி***

அரியாலை ஐக்கிய வி.க, கொக்குவில் கே.சி.சி.சி. வி.க. (ஓ-7)

# குடிநீர் விநியோக திட்டத்திற்கு ரூ.40 மில்லியன் நிதி ஒதுக்கீடு

(யாழ்ப்பாணம்)

குடாநாட்டின் இந்த ஆண்டுக்கான குடிநீர் விநியோகத் திட்டத்திற்கென 40 மில்லியன் ரூபா நிதி ஒதுக்கப்பட்டுள்ளது.

தேசிய குடிநீர் வழங்கல் வடிகாலமைப்புச் சபையினர் இதற்கான வேலைகளைத் துரிதமாக மேற்கொள்ளவுள்ளனர். குடிநீர் வழங்கலுக்கு ஒதுக்கப்பட்ட நிதி மேற்படி சபைக்கு வழங்கப்பட்டதைத் தொடர்ந்து முதற்கட்டமாக வடமராட்சிப் பகுதிக்கான குடிநீர் விநியோகப் பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. தம்பசிட்டி மாயக்கைப் பகுதியில் தண்ணீர்மட்டம் குறையாத நிலையிலுள்ள கிணறு ஒன்று மூலம் புனர்நிர்மாணம் செய்யப்படவுள்ளது. இக் கிணறு மூலம் பல பிரதேசங்களுக்குக் குழாய் வசதியுடன் குடிநீர் விநியோகம் மேற்கொள்ளப்படவுள்ளது.

இதேவேளை வலிகாமம் மேற்கு, கிழக்கு, தென் மேற்கு ஆகிய பிரதே சங்களிலும் குடிநீர் விநியோக வேலைகள் மிக விரைவில் ஆரம்பிக்கப்படவுள்ளன. (ஓ-6)

# மிதிவெடியகற்றப்பட்ட பிரதேசங்கள் மிகவிரைவில் மக்கள் பாவனைக்கு

(யாழ்ப்பாணம்)

ஹலோ ரஸ்ற் மற்றும் டெனிஸ் ஆகிய நிறுவனங்களால் யாழ்.மாவட்டத்தில் உள்ள பிரதேசங்களில் மேற்கொள்ளப்பட்ட மிதிவெடியகற்றும் பணிகள் நிறைவடைந்துள்ளன. மிகவிரைவில் அப் பிரதேசங்கள் மக்களின் பாவனைக்காக கையளிக்கப்படவுள்ளது.

அச்சுவேலி, அரியாலை, மட்டுவில், கோயிலாக்கண்டி, இறால் பதனிடும் தொழிற்சாலை-நாவற்குழி,கரம்பொன் ஆகிய பிரதேசங்களே மிதிவெடி அகற்றப்பட்டு மக்களின் பாவனைக்கு விடப்படவுள்ளது.

மேலும் சங்கத்தானை கல்லூரி வீதி, சங்கத்தானை கோவிலடி, நுணாவில் கிழக்கு, கரம்பொனில் அமைந்துள்ள இரண்டு பிரதேசங்கள், செம்மணிக்குளம், புத்தூர் மேற்கு, நுணாவில் ஆகிய பிரதேசங்கள் 2009 ஆம் ஆண்டு வேலைத்திட்டங்களுக்காக ஹலோ ரஸ்ற், டெனிஸ் ஆகிய நிறுவனங்களிடம் கையளிக்கப்பட்டுள்ளதாக யாழ். மாவட்ட மிதிவெடி செயற்பாட்டு அலுவலகம் தெரிவித்துள்ளது. (ஓ-7)




## யாழ்.செய்திகள்

# நீர்விநியோகம் சீரானது

(யாழ்ப்பாணம்)

திருநெல்வேலி பம் நிலையத்தில் இருந்து குருநகர் தாங்கிக்கு நீரேற்றும் 6'' நீரேற்றுக் குழாய் பலாலி வீதி ஆலடிச் சந்திக்கு அருகாமையில் உடைந்து நீர்விநியோகம் தடைப்படும் நிலை ஏற்பட்டது.

நேற்றைய தினம் அதிகாரிகள், பொருத்துனர்கள், தொழிலாளிகள் உட்பட 15 பேரைக் கொண்ட குழு மேற்படி திருத்த வேலைகளை காலை 7 மணியிலிருந்து மேற்கொண்டு நீர் விநியோகத்தைத் தடை செய்யாமல் நிறைவேற்றினர்.

இதனால் குருநகர் பகுதி, போதனா வைத்தியசாலை ஆகியவற்றிற்கான நீர் விநியோகம் எதுவித தடங்கலுமின்றி தொடர்ந்து நடைபெறும் என மாநகரசபை வட்டாரங்கள் தெரிவித்துள்ளன. (ஓ)

# வினைத்திறமைகாண் பரீட்சை

(யாழ்ப்பாணம்)

வடக்கு மாகாண அலுவலகப் பணியாளர் சேவை வகுப்பு III,வகுப்பு II ஆகியவற்றை சேர்ந்தவர்களுக்கான வினைத்திறமைகாண் பரீட்சை எதிர்வரும் 14 ஆம் திகதி சனிக்கிழமை காலை 10 மணிக்கும் ,சாரதி சேவை வகுப்பு IIஅ, வகுப்பு IIஆ ஆகியவற்றைச் சேர்ந்தவர்களுக்கான வினைத்திறமை காண் பரீட்சை எதிர்வரும் 15 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 10 மணிக்கும் யாழ்ப்பாணம் பிராந்திய ஆணையாளர் அலுவலகத்தில் நடைபெறவுள்ளது.

பரீட்சைக்கு விண்ணப்பித்தவர்களுக்கான பரீட்சை அனுமதி அட்டை மாகாண பொதுச்சேவை ஆணைக்குழுவால் நேரடியாக அனுப்பிவைக்கப்பட்டுள்ளது.

இது வரை அனுமதி அட்டை கிடைக்கப் பெறாதவர்கள் பின்வரும் தொலைபேசி இலக்கங்களுடன் தொடர்புகொள்ளுமாறு பிராந்திய ஆணை யாளர் கேட்டுக் கொள்கின்றார்.

தொலைபேசி இலக்கம்: 060-2262951, 071-6229465. (ஓ)

# தொண்டர் ஆசிரியர் சங்க கலந்துரையாடல்

(யாழ்ப்பாணம்)

தொண்டர் ஆசிரியர் சங்க கலந்துரையாடல் நாளை வெள்ளிக்கிழமை காலை 9.00 மணியளவில் யாழ். ஆரியகுளம் சந்தியில் அமைந்துள்ள புதிய உயர் கல்லூரி மண்டபத்தில் நடைபெறும் என்று தொண்டர் ஆசிரியர் சங்கம் தெரிவித்துள்ளது. (ஓ)

# கட்டாக்காலி விலங்குகளின் தொல்லை அதிகரிப்பு

(கோண்டாவில்)

கோண்டாவில், கொக்குவில் பகுதிகளில் அண்மைக் காலமாக கட்டாக்காலி விலங்குகளின் தொல்லை அதிகரித்து வருகின்றது.

இவ் விலங்குகள் வீதியின் குறுக்கே வரும் போது போக்குவரத்து பாதிக்கப்படுவதுடன் பொது இடங்களில் குறிப்பாக ஆலயங்களில் அவற்றின் கழிவுகளால் அசௌகரியம் ஏற்படுவதை காணமுடிகின்றது. (ஓ-36)

# சர்வதேச மகளிர் விழாவும் நூல் வெளியீட்டு விழாவும்

கட்டைவேலி நெல்லியடி ப.நோ.கூ.சங்க கலாசாரக் கூட்டுறவுப் பெருமன்றத்தினால் நடத்தப்படும் சர்வதேச மகளிர் தினவிழாவும் புனிதவதி சண்முகலிங்கத்தின் '' நாடகம் நாட்டியம்'' என்னும் நூல் வெளியீட்டு விழாவும் நாளை வெள்ளிக்கிழமை பிற்பகல் 2.30 மணிக்கு சங்கக் காரியாலய மண்டபத்தில் கலாசார கூட்டுறவு பெருமன்றத் தலைவர் த.சிதம்பரப்பிள்ளை தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் பிரதமவிருந்தினராக கரவெட்டி பிரதேச செயலர் எஸ்.சத்தியசீலன் கலந்துகொள்ளவுள்ளார். தொடர்ந்து "புனிதவதியின் நாடகங்களின் பெண் பாத்திரங்கள்" எனும் பொருளியல் யாழ்.பல் கலைக்கழக சிரேஷ்ட விரிவுரையாளர் திருமதி நாச்சியார் செல்வநாயகமும், "புனிதவதி யின் நாடகங்களின் சமூகப் பண்புகள்'' எனும் பொருளில் உடுப்பிட்டி அமெரிக்கன் மிஷன் கல்லூரி ஆசிரியர் க.ணேஸ்வரன் ஆகியோர் மதிப்பீட்டுரை நிகழ்த்துவார்கள். (ஓ-4)

# சங்கானையில் திருட்டு


(நெடுந்தீவு)

சங்கானையிலுள்ள வீடொன்றில் கடந்த திங்கட்கிழமை நள்ளிரவில் பணம் உட்பட பெறுமதியான பொருட்கள் திருடப்பட்டுள்ளன.

அராலிவீதி சங்கானையைச் சேர்ந்த இராசையா என்பவரின் வீட்டிற்கு கடந்த திங்கட்கிழமை இரவு சென்ற திருடர்கள் வீட்டின் ஜன்னலை உடைத்து உள்ளே சென்று பொருட்களைத் திருடியுள்ளனர். பெருந்தொகைப் பணம், தங்க நகைகள், கமரா, கைத் தொலைபேசி என்பன திருடப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது.

இதேவேளை இப் பகுதியில் கடந்த சில நாட்களாக திருட்டுச் சம்பவங்கள் அதிகரித்துள்ளதாக மக்கள் தெரிவித்தனர். (ச-11)





அளவெட்டி அருணாசலம் வித்தியாலயத்தின் வருடாந்த இல்ல மெய்வன்மைப் போட்டியை வித்தியாலய அதிபர் கு.ஜெகநாதன் மங்கல விளக்கேற்றி ஆரம்பித்து வைப்பதையும், அருகில் பிரதம விருந்தினராக் கலந்து கொண்ட வலிகாமம் வலயப் பிரதிக் கல்விப் பணிப்பாளர் திருமதி ச.நாகராஜா மற்றும் பாடசாலை ஆசிரியர்கள் நிற்பதை முதலாவது படத்திலும், பிரதம விருந்தினர் வெற்றிபெற்ற இல்லத் தலைவனுக்கு கேடயம் வழங்குவதை இரண்டாவது படத்திலும் காணலாம்.

# இலங்கையில் தமிழர் 93

### ஹெள மக்களும் தமிழ் மக்களும் பொ.ஆ.300–900

சைவ வைணவ இயக்கங்களின் வெற்றிக்குத் தமிழ்நாட்டு ஆட்சியாளரும் வணிக கணத்தவரும் ஒரு முக்கியமான வகையில் அடிக்கலம் நாட்டியிருந்தனர். உள்ளூர் ஆட்சியாளரும் உயர் குழாத்தினரும் வட இந்திய மரபுகளை வரவேற்றுப் பின்பற்றும் போக்குக் காணப்பட்ட தென்னிந்தியா–இலங்கைப் பிராந்தியத்தில் பல்லவ வம்சத்தவர் ஒரு குறிப்பிடத்தக்க நடவடிக்கையில் ஈடுபட்டுப் பிராமணியச் செல்வாக்கு வளர்வதற்கு உதவினர். தமிழ்நாட்டுக்கு வெளியே இருந்து வந்த பல்லவர், ஏற்கனவே பிராமணிய மரபுகளைக் கடைப்பிடிப்போராய் வந்தனர். வந்த பின் தொண்டை மண்டலத்தில் ஆட்சியாளராக அதிகாரம் பெற்ற இவர்கள் முன்னொரு போதும் தமிழ் அரசுகளில் காணப்படாத அளவுக்குப் பிராமணியச் சடங்குகளை நடத்தினர்.

தென்னிந்தியாவில் முன்பிருந்தே பிராமணர்களுக்கு ஆட்சியாளர் ஆதரவளிக் கும் வழக்கம் காணப்பட்டாலும், பல்லவர் ஆட்சியில் பிராமணருக்குச் சிறப்பு ஆதரவு வழங்கப்பட்டது. இப்படியான ஆதரவின் ஒரு வெளிப்பாடாகப் பிரமதேயம் எனப்பட்ட பிராமணக் குடியிருப்புகள் அரசின் பல்வேறு பகுதிகளிலும் நிறுவப்பட்டன. பல்லவருடைய முன்மாதிரியைப் பாண்டியரும் பின்பற்றினர். தென்னிந்தியா முழுவதிலுமே இப் போக்குக் காணப்பட்டது எனலாம். ஆறாம் நூற்றாண்டின் பின் எழுச்சி பெற்ற புதிய அரச வம்சங்கள் கடைப்பிடித்த முக்கிய கடமைகளுள் ஒன்றாகப் பிராமணருக்கும் கோயில்களுக்கும் நிலத்தானம் வழங்குவது சிறப்பிடம் பெற்றது.

பிரமதேயம் என்பது ஒரு பிராமணக் குடியிருப்பு மட்டுமன்றி, ஊர்ப் பொருளியல் அமைப்பில் ஒரு மையமான நிறுவனமாகக் காணப்பட்டது. கோயில் ஒன்றை இதயமாகக் கொண்டு, ஏற்கனவே மந்தை மேய்ப்பிலும் விவசாயத்திலும் ஈடுபட்டிருந்த குடிகளை உள்ளடக்கி, நீர்ப்பாசன வசதிகளின் பராமரிப்புக்குப் பொறுப்பேற்ற, சமூக அதிகாரமும் பொருளியல் அதிகாரமும் கொண்ட ஊர் சார்ந்த ஒரு நிறுவனமாகப் பிரமதேயம் முக்கியத்துவம் பெற்றது. பிரமதேயத்தின் நிர்வாகத்தை நடத்த 'சபை' என்ற குழு ஒன்று இருந்தது. இக்குழுவைச் சேர்ந்தோர் வாரியங்கள் எனப்பட்ட சிறு காரியக் குழுக்களாகப் பிரிக்கப்பட்டு அவற்றின் மூலம் நீர்ப்பாசன வசதிகளாகிய குளங்கள், கால்வாய்கள் ஆகியவற்றைப் பராமரிப்பதற்கான நடவடிக்கைகள், கோயில் நிர்வாக நடவடிக்கைகள் மற்றும் கல்விக் கூடங்களை நடத்தும் ஏற்பாடுகள் ஆகியவை கவனிக்கப்பட்டன.

பிராமணருக்கு ஆதரவளிப்பது இந்திய மன்னர்களுடைய இலட்சியங்களுள் ஒன்றாக எப்பொழுதுமே இருந்து வந்தது. இலங்கையிலும் தென்கிழக்காசியாவிலும், சமஸ்கிருத மயமாக்கத்தின் விளைவாக இந்த இலட்சியத்தை மன்னர்கள் கடைப்பிடித்தனர். இதனால் அவர்கள் இந்தியாவில் இருந்து, சிறப் பாகத் தென்னிந்தியாவில் இருந்து பிராமாணர்களை வரவழைத்துத் தம் அரசுகளில் குடியிருத்தி, பல்வேறு சந்தர்ப்பங்களில் தானங்கள் வழங்கி ஆதரித்தனர். மன்னர்கள் மட்டுமன்றி, அரசின் உயர் குழாத்தினரும் வர்த்தகர்களும் கொடுத்த ஆதரவுடன் இப் பிராமணர்கள் இலங்கையிலும் தென் கிழக்காசியாவிலும் சைவ வைணவ வழிபாட்டைப் பரப்புவதில் பெரும் பங்கு கொண்டிருந்தனர். இலங்கையில் பிரமதேயம் என்ற நிறுவனம் அறிமுகப்படுத்தப்பட்ட பின் சைவம் வளர்வதற்குத் தேவைப்பட்ட நிறுவன ரீதியான அடித்தளம் அமைக்கப்பட்டுச் சைவம் வலுப்பெறுவதற்கு வழி கோலப்பட்டது.

தென்னிந்தியாவில் சைவ வைணவ இயக்கம் பௌத்தத்துக்கு எதிராக எழுந்த காலத்தில், அனுராதபுரத்தில் ஆட்சி நடத்திய பௌத்த மன்னர்கள் பிராமணருக்கு ஆதரவு வழங்குவதன் மூலம் சைவம் இலங்கையில் வலுப்பெற உதவினர் எனலாம். பல நூற்றாண்டுகளாக இவர்களுடைய முன்னோர்கள் பிராமணர்களுக்கு ஆதரவளித்து வந்தனர்.

குறிப்பிடத்தக்க விதிவிலக்காக ஒரு மன்னனை மட்டுமே எடுத்துக் காட்டலாம். அவன் மூன்றாம் நூற்றாண்டில் ஆட்சி நடத்திய மஹாஸேன மன்னன் ஆவான். இவன் திருகோணமலையிலிருந்து சிவன் கோயில் ஒன்றையும் பிற பிராமணிய வழிபாட்டுத் தலங்களையும் அழித்ததாக அறிகின்றோம்.

ஏனைய மன்னர்கள் பொதுவாக பிராமணர்களுக்கும் பௌத்த சங்கத்துக்கும் ஆதரவளித்தனர். ஆறாம் நூற்றாண்டு வரை பிராமணருக்கு வழங்கிய ஆதரவு பௌத்தத்தின் நிலையைப் பாதிக்கவில்லை எனலாம். பொதுவாக இந்த ஆதரவு அரச சபையில் புரோகிதர்களாகவும், சோதிடராகவும் வேறும் நிர்வாகிகளாகவும், சிறப்புப் பதவி பெற்றிருந்த பிராமணர்களுக்கே வழங்கப்பட்டது எனலாம். ஆறாம் நூற்றாண்டில் பல்லவ அரசில் ஏற்பட்ட முன்னேற்றங்கள் இலங்கையிலும் செல்வாக்கினை உண்டு பண்ணின எனத் தோன்றுகிறது. பிராமணருக்கு மன்னர்கள் கொடுத்த ஆதரவு பாளி வரலாற்றேடுகளில் பதிவு பெறும் அளவுக்கு முக்கியத்துவம் அடைந்தது.

ஆறாம் நூற்றாண்டின் பின் அனுராதபுரத்து மன்னன் ஒருவன் 'அங்குமிங்குமாகப் பழுதடைந்திருந்த தேவாலயங்களைப் புதுக்கியும், மன்னர்களுக்கு உகந்த உணவைப் பிராமணருக்கு வழங்கியும் ஆட்சி செலுத்தினான். இன்னொரு மன்னன் பிராமணர்களைத் தமக்குரிய கடமைகளைப் புரிந்து வாழ்க்கை நடத்துமாறு ஊக்குவித்தான். வேறொரு மன்னன் ஆயிரம் பிராமணர்களுக்கு விலையுயர்ந்த கொடைகளாகிய பொன்னையும் முத்தையும் மாணிக்கத்தையும் வழங்கினான். இவற்றைக் குறிப்பிடும் பௌத்த பாளி வரலாற்றேடு, அனுராதபுரத்து மன்னர் பிரமதேயங்களை நிறுவியது பற்றிக் கூறவில்லை.

பேராசிரியர்
**கா. இந்திரபாலா**

ஆனால் மன்னர்கள் பிராமணருக்கு வழங்கிய ஆதரவை நோக்குமிடத்து பிரமதேயங்களும் அமைக்கப்பட்டிருக்கலாம் எனத் தோன்றுகிறது. பல்லவர் செல்வாக்குக்கு உட்பட்ட இடங்களிலாவது பிரமதேயங்கள் அமைக்கப்பட்டிருக்கலாம். (தொடரும்)

# உலக மக்களைக் கவர்ந்த ஒபாமா
## அடிமைச் சந்தையிலிருந்து வெள்ளை மாளிகை வரை 13

ஒபாமாவின் அம்மா அப்பாவைப்பற்றி கூறும்போதெல்லாம் அவர் கொஞ்சம் ஆதிக்கம் செலுத்துபவர். அதற்கு அவரின் அடிப்படைக் குணமான நேர்மைதான் காரணம். ஆகவே தான் சிலவேளைகளில் அவரால் விட்டுக்கொடுக்க முடியாதிருந்தது. அவர் வெட்கித் தலைகுனிந்த் வேளைகள் இல்லாமல் இல்லை.


Extended Family

ஒபாமாவின் அம்மா தன் கணவர் பற்றிய சித்திரத்தை அழகும் மென்மையும் உள்ளவராகக் காட்ட முயன்றார்.

அமெரிக்காவின் ஒவ்வொரு மாநிலத்திலும் ஒரு சங்கம் இருக்கிறது. அதன் பெயர் "வீ–பீற்றா–கப்ப" (Phi-Beta-kappa) இதில் அங்கம் வகிப்பவர்கள் பல்கலைக் கழகங்களிலிருந்தும் கல்லூரிகளிலிருந்தும் தெரிவு செய்யப்படும் பட்டதாரி மாணவர்களாவர். இவர்கள் தத்தம் துறைகளில் அதி உயர் தரத்தை அடைந்து பாராட்டப் பெற்றவர்கள். இச் சங்கத்தில் கௌரவ அங்கத்தவர்களாகவே அவர்களிருப்பர்.

சங்கத்தின் பெயரில் வரும் எழுத்துக்கள் கிரேக்க மொழியில் உள்ள சொற்களின் முதலெழுத்தைக் கொண்டன. அதன் பொருள் கல்வியை நேசிப்பதே–வாழ்வின் வழிகாட்டி (Love of Learning is the Guide of Life) என்பதாகும். இச் சங்கத்தின் இலச்சினை தங்கத்தாலான திறவுகோல் ஆகும்.

**Phi Beta Kappa Golden Key**

1976 இல் முதன்முதலாக வில்லியம் ரூமேரி கல்லூரி ஸ்தாபிக்கப்பட்டது. யேலில் 1780 இலும் ஹார்வாட்டில் 1781 இலும் நிறுவப்பட்டன. இதில் அங்கத்துவம் பெறுவது மிகப் பெரிய கௌரவமாக கல்வியாளர்களால் கருதப்படுகிறது. ஒபாமாவுக்கு இந்த அரிய வாய்ப்புக் கிட்டியது.

தங்கத் திறவுகோலை பெறுவதற்காகத் தனது விருப்பமான ஜீன்ஸும் சேர்ட்டும் அணிந்து வந்தார்.

ஆனால் அங்கே வந்திருந்தவர்கள் எல்லோரும் உயர்ந்த ரக சூட்டுகள் அணிந்திருந்ததைக் கண்டதும் வெட்கித் திகைத்து நின்றார். ஒபாமாவின் தந்தை சாமானியரல்ல. எந்த இக்கட்டான சூழலையும் சமாளித்து வெற்றி வாகை சூடி வெளிவரக் கூடிய வல்லமை அவரிடம் நிரம்பவே இருந்தது. ஒருமுறை சர்வதேச சங்கீத விழா ஒன்றுக்கு ஏற்பாடாகி இருந்தது. அதில் ஒபாமா (சீனியர்) ஆபிரிக்கப் பாடல்களைப் பாடுவதாக ஒழுங்குசெய்யப்பட்டது.

ஒபாமா சபைக்கு வந்தபின்தான் அது மிகப் பெரிய விழாவென்று தெரியவந்தது. இவருக்கு முன் ஒரு ஹவாய்ப் பாடகி முழுப் பக்க வாத்தியங்களோடு நன்றாகப் பாடினாள். அதைத் தொடர்ந்து ஹுஸெயின் ஒபாமாவின் முறை. அவர் நிலைகுலைந்து விடவில்லை. கம்பீரமாக மேடை ஏறினார்.

அந்தப் பிரமாண்டமான கூட்டத்தில் பயமேதுமின்றிப் பாடினார். சபையோர் கை தட்டி தங்கள் ஆனந்தத்தை வெளிப்படுத்தினர். கைதட்டல் வெகுநேரம் நீடித்தது.

தாத்தா கூறினார் உனது அப்பாவிடமிருந்து நீ கற்க வேண்டியது ஒன்றுண்டு. அதுதான் தன்னம்பிக்கை (confidence). அதுதான் மனிதனின் வெற்றியின் இரகசியமாகும்.


ஒபாமா தன் தந்தையின் படங்களைத் தேடி வீடெங்கும் சல்லடை போடுவார். கிடைத்தபாடில்லை. வெகு காலத்துக்குப் பின் அவரின் நினைவு நன்கு வளர்ச்சியடைந்த போது அவருக்கு அதன் காரணம் புலனாகியது. தாய்க்கு அப்போது தான் ஒரு புதிய நண்பன் கிடைத்திருந்தான். அவர் தான் அம்மாவின் இரண்டாவது கணவனாகப் போகிறார் என்பதை மகன் ஒருவாறு ஊகித்துக் கொண்டார்.

ஆகவேதான் படங்கள் எங்கோ மறைக்கப்பட்டுவிட்டன என்பதை அவர் உணர்ந்தார்.

தன் தந்தை ஓர் ஆபிரிக்கர். லுவோ இனத்தைச் சேர்ந்த கென்யன். அலேகோ என்ற கிராமத்தில் பிறந்தவர். இக் கிராமம் விக்ரோறியா ஏரிக் கரையில் உள்ள வறிய கிராமம்.

ஒபாமாவின் தந்தை வழி தாத்தாவின் பெயர் ஹுஸெயின் ஒனியாங்கோ ஒபாமா என்பதாகும். இவர் ஒரு நாட்டு வைத்தியர். மந்திரவாதியும் கூட. புகழ்பெற்ற விவசாயி. இவரின் மகன் ஒபாமா சின்ன வயதில் தந்தையின் ஆடுகளை மேய்ச்சலுக்கு விட்டுவிட்டுத்தான் பள்ளிக்கூடம் செல்வார். இந்தப் பள்ளிக்கூடம் பிரித்தானிய குடியேற்ற ஆட்சியாளர்களால் ஸ்தாபிக்கப்பட்டது.

ஒபாமா (சீனியர்) கூரிய புத்தியும் படிப்பில் முன்னேறத் துடிப்புமுள்ளவர் என்பதைக் கண்ட ஆட்சியாளர்கள் அவருக்கு புலமைப் பரிசில் வழங்கி நைரோபியில்


ஒபாமாவின் தந்தை

படிப்பைத் தொடர ஆவன செய்தனர். அதன் பின் கென்யா சுதந்திரம் அடைந்த போது ஐக்கிய அமெரிக்காவுக்கு மேற்படிப் புக்காக கென்ய தலைவர்களாலும் அமெரிக்க அரசாலும் தேர்ந்து அனுப்பப்பட்டார்.

### ஜம்பொன்

இந்தக் கால கட்டத்தில் ஆபிரிக்க மாணவர்கள் அலை அலையாக மேலைநாடுகளுக்கு அனுப்பப்பட்டார்கள். அங்கு அவர்கள் தங்கள் நாட்டை அபிவிருத்தி செய்ய வேண்டிய தொழில்நுட்பக் கல்வியைப் பெற்று தாய் நாடு திரும்பி வந்து தத்தம் நாட்டை வளம்படுத்த வேண்டும் என்ற உயர்ந்த நோக்கம் கொண்டது இப்பணி. (தொடரும்)

# இலங்கையில் நடைபெறும் போருக்கு இந்தியாவின் அழுத்தமே காரணம்

**ஈழத்தமிழர் விவகாரத்தில் இந்தியா மேற்கொண்டு வரும் மனிதாபிமானத்திற்கு எதிரான குற்றத்தை சர்வதேச சமூகம் கிளர்ந்தெழுந்து கண்டிக்கவேண்டும் என நவசமசமாஜக் கட்சியின் தலைவர் கலாநிதி விக்கிரமபாகு கருணாரட்ண தெரிவித்துள்ளார்.**

தமிழ் மக்களின் சுய நிர்ணய உரிமைக்காக நீண்ட காலமாக குரல்கொடுத்து வருபவர்களில் கலாநிதி விக்கிரமபாகு கருணாரட்ணவும் ஒருவர். ஐக்கிய தொழிலாளர் சம்மேளனம். விசாரணை ஆணைக்குழு என்பவற்றின் போசகராகவும் இலங்கைத் தொடருந்து பணியாளர் சங்கத்தின் தலைவராகவும் விளங்கும் இவர் அண்மையில் நெதர்லாந்தின் ஆம்ஸ்ரார்டாம் நகருக்கு சென்றிருந்த போது சுவிசிலிருந்து வாரம் இரு முறை வெளிவரும் *நிலவரம்* வார ஏட்டுக்கு நேர்காணல் வழங்கியுள்ளார்.

அந்த நேர்காணல் வருமாறு,

**நான்காம் அகிலத்தின் அனைத்துலகக் குழுவின் மாநாடு நெதர்லாந்து ஆம்ஸ்ரார்டாம் நகரில் நடைபெற்ற போது இலங்கையின் தமிழர் தாயகத்தில் நடைபெறும் யுத்தம் தொடர்பான தீர்மானம் ஒன்று நிறைவேற்றப்பட்டதாக அறிகின்றோம். இது தொடர்பாக சற்று விளக்குவீர்களா?**

ஆம். நான்காவது அகிலத்தின் கூட்டத்திலே தமிழர்கள் மீதான தாக்குதல்களை உடன் நிறுத்துமாறு கோரும் தீர்மானமொன்றைக் கொண்டு வந்தேன். அரசாங்கம் விடுதலைப்புலிகளுடன் வடக்கு கிழக்கில் ஒரு இடைக்கால அரசை நிறுவுவதற்கான பேச்சுக்களில் ஈடுபட வேண்டும். தமிழ் மக்களுக்கு அரசியல் அமைப்பு ரீதியில் உரிமைகள் வழங்கப்படவேண்டும் எனவும் அதில் கோரியிருந்தேன்.

**இந்தத் தீர்மானத்திற்கு கலந்து கொண்டோரிடம் இருந்து எத்தகைய ஆதரவு கிடைத்தது?**

அங்குள்ள நிலமைகளைக் கேள்வியுற்று அவர்கள் மிகவும் அதிர்ச்சியடைந்தார்கள். அவர்கள் ஏகமனதாக இந்தப் பிரேரணையை அங்கீகரித்தார்கள். தத்தம் நாடுகளில் இந்த விடயத்தை பல வழிகளிலும் முன்னெடுப்பதாகவும் கூறினார். அதேவேளை இந்தத் தேசியப் பிரச்சினை தொடர்பான தரவுகளையும் விளக்கங்களையும் அறிந்து கொள்ள விரும்பினார்கள். அவர்களுக்கு சில விடயங்கள் தெரிந்திருக்கவில்லை. அவர்கள் மேலதிக தகவல்களை அறிந்து கொள்ள விரும்பிய அதேவேளை, தங்கள் நாடுகளில் ஒருமைப்பாட்டு அமைப்புக்களை உருவாக்குவதற்கும் சம்மதம் தெரிவித்துள்ளார்கள். ஐரோப்பா, அமெரிக்கா , லத்தீன்அமெரிக்கா , ஜப்பான் ,தென் கிழக் காசிய நாடுகள் என்பவற்றில் இருந்து பிரதி நிதிகள் வருகை தந்து கலந்து கொண்டிருந்தார்கள்.

**இந்தத் தீர்மானம் தொடர்பில் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் எதிர்வினை என்னவாக இருக்கும் என நினைக்கின்றீர்கள்?**

இன்றைய நிலையில் அவர்கள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ அரசு பாரிய மனித உரிமை மீறல்களைச் செய்துகொண்டிருக்கின்றார்கள். தமிழர்களை அச்சுறுத்திப் பணிய வைத்தி விட முடியும் என அவர்கள் நினைக்கின்றார்கள்.

ஆனால் உலகம் முழுவதிலும் உள்ள உழைக்கும் மக்களும் தொழிற்சங்கங்களும்



யுத்தத்துக்கு எதிராக பரப்புரைகளைத் தொடங்கினால் சில மாற்றங்களை எதிர்பார்க்க முடியும் .உண்மையிலேயே இலங்கை அரசு இந்தியாவின் அழுத்தமும் ஆதரவும் காரணமாகவே இந்தப் பாதையில் பயணித்துக் கொண்டிருக்கின்றனர். இந்தியா தான் உண்மையான குற்றவாளி இவர்கள் தான் இந்தச் சூழ்நிலையை உருவாக்கினார்கள் ஜனாதிபதி மஹிந்த அதற்கு நிர்ப்பந்திக்கப்பட்டுள்ளார். அவர்கள் ஜனாதிபதி மஹிந்தவின் பின்னால் இருந்து கொண்டு இந்தச் சூழ்நிலையை உருவாக்கி யுள்ளார்கள்.

நான் நினைக்கின்றேன். இந்தியாவுக்கு ஒரு பொருளாதார இலக்கு இருக்கின்றது. அவர்கள் வளங்களைக் கைப்பற்ற நினைப்பது தெளிவாகப் புரிகின்றது. இயற்கை வளங்களை மட்டுமன்றி மனித வளங்களையும் கைப்பற்ற அவர்கள் நினைத் திருக்கின்றார்கள் அதனாலேயே ஜனாதிபதி மஹிந்தவை அவர்கள் இதற்கு நிர்ப்பந்தித்துள்ளார்கள்.

உலகம் இதனை நன்கு உணர்ந்து கொள்ள வேண்டும். ஜனாதிபதி மஹிந்தாவுக்கு உதவுவதை நிறுத்துமாறு உலக சமூகம் இந்தியாவுக்கு அழுத்தம் தர வேண்டும். ஆயுதங்கள், வெடி மருந்துகள், தொழில்நுட் பம மற்றும் ஆலோசனை என்பவற்றை வழங்குவதை நிறுத்துமாறு கோர வேண்டும்.

**ராஜீவ் காந்தி கொலையே இந்தியா இவ்வாறு செயற்படக் காரணம் என சிலர் கூறி வருகின்றனரே?**

ராஜீவ்காந்தி கொலை பொதுமக்களைப் பொறுத்தவரை ஒரு விடயமாக உள்ளது உண்மையே. அதேவேளை ஆளும் பிராமண வர்க்கமான காங்கிரஸ் இதை ஒரு கருவியாகப் பயன்படுத்தி வருகின்றது.

உண்மையிலேயே ராஜீவ் காந்தி கொலை ஒரு பிரதான காரணமாயிருந்தால் இன்று தமிழ் நாட்டில் நடக்கின்ற விடயங்கள் எவ்வாறு நடக்க முடியும்? தென்னிந்தியாவில் மக்கள் உணர்வெழுச்சி கொண்டுள்ளனர். தங்களுக்குத் தாங்களே தீ மூட்டிக்கொள் கின்றனர்.

எனவே இந்தியாவின் நிலைப்பாட்டிற்கு இதுவொரு பிரதான காரணம் எனக் கூறிவிட முடியாது உண்மையில் பொருளாதாரக் காரணங்களுக்காகவே இந்தியா ஆட்சியாளர்கள் இத்தகைய செயற்பாடுகளில் ஈடுபட்டு வருகின்றனர்.

## விக்கிரமபாகு கருணாரட்ண சுவிஸ் வார ஏட்டிற்குப் பேட்டி

**பொருளாதார காரணம் என நீங்கள் கூறுவதை சற்று விளக்க முடியுமா?**

தென்கிழக்காசியாவின் பொருளாதாரத்தை தமது கட்டுப்பாட்டின் கீழ் கொண்டு வரும் ஒரு திட்டம் அவர்களிடம் உள்ளது. பாகிஸ்தான், பங்களாதேஷ், இலங்கை, மாலைதீவு உட்பட அனைத்து பிரதேசமும் தமது கட்டுப்பாட்டில் இருக்க வேண்டும் என அவர்கள் விரும்புகின்றனர். அமெரிக்கா இந்த நிகழ்ச்சித் திட்டத்துக்கு ஆதரவு வழங்கி வருகின்றது. தற்போதைய நிலையில் அமெரிக்காவும், இந்தியாவும் சிறந்த நட்பு நாடுகளாக விளங்கி வருகின்றன.

மன்மோகன் சிங்கைப் பொறுத்தவரை ஆடையில் மாத்திரமே அவர் இந்தியர். நிஜத்தில் அவர் ஓர் உலக வங்கி நபர். அவர் நிஜமான அமெரிக்க மனோபாவம் உடைய ஒருவர். அவர் ஒபாமாவுக்கு ஆலோசனை வழங்கப் பொருத்தமானவர். புதிய திறந்த பொருளாதார விடயத்தில் அவர் ஒரு புலி.

எனவே, அவர்கள் தான் இந்தச் சூழ்நிலையைக் கையாண்டு வருகின்றார்கள். இது அவர்களுடைய நிகழ்ச்சித் திட்டம். இந்திய ஆளும் வர்க்கத்தின் பொம்மையே ஜனாதிபதி மஹிந்த.

**சாதாரண சிங்கள மக்களில் ஒரு பகுதியினர் தமிழர் போராட்டத்துக்கு ஆதரவு வழங்கி வந்த காலமொன்று இருந்தது. ஆனால், அது படிப்படியாகக் குறைந்து விட்டது. இந் நிலையில் கிட்டிய எதிர் காலத்தில் தமிழர் போராட்டத்துக்கு ஆதரவாகச் சிங்கள மக்களைத்திசை திருப்பி விட முடியும் என நினைக்கிறீர்களா?**

மக்கள் தலைவர்களையே பின்பற்றுகிறார்கள். மக்களால் தாமாகத் தீர்மானமெடுக்க முடியாது. 24 மணித்தியாலமும் தாங்கள் யுத்தத்தில் வெல்வதாகவும் அதற்கூடாகவே தமிழ் மக்களுடன் ஐக்கியத்தைப் பேண முடியும் எனவும் கூறும் போது சிங்கள மக்கள் அதனை நம்புகிறார்கள்.

மக்கள் சாதாரண வழிமுறைகளையே விரும்புகிறார்கள். சிக்கலானவற்றை அல்ல. இதன் அர்த்தம் மக்கள் இனவாதிகள் என்பதல்ல. அதனால் தான் நான் கொழும்பில் நடமாடக் கூடியதாக இருக்கிறது. நான் எங்கு சென்றாலும் மக்கள் என்னைக் கனம் பண்ணுகிறார்கள். மக்கள் இனவாதிகள் எனக் கூறப்படுவதில் எனக்கு நம்பிக்கை யில்லை.

உண்மையில் இலகுவான தீர்வுகள் உண்டென அவர்கள் நம்ப வைக்கப்பட்டுள்ளார்கள். அவர்கள் தமிழ் மக்கள் மத்தியிலே வாழ்ந்து வரும் புலிகள் கூடாதவர்கள் என நம்ப வைக்கப்பட்டுள்ளார்கள்.

இத்தகைய தீய சக்திகளை அழித்து வருகின்றோம். அதற்கூடாக பிரச்சினை தீர்க்கப்பட முடியும் என்ற செயற்கையான படம் அவர்களுக்குத் தரப்பட்டுள்ளது. அவர்கள் மத்தியில் நிலவும் வறுமை மற்றும் ஏனைய பிரச்சினைகள் காரணமாக அவர்கள் இலகுவான தீர்வுகளில் நம்பிக்கை கொள்ள வேண்டிய நிலமை உள்ளது.

**மஹிந்த சகோதரர்களால் எவ்வளவு காலத்திற்கு இந்த நிலமையில் நீடிக்க முடியும்?**

அவர்களுடைய அபின் வேலை செய்யும் மட்டும். அபினால் நீண்ட காலம் செயற்பட முடியாது அல்லவா? அபின் என்பது 2, 3 மணி நேரமே போதை தரக்கூடிய ஒரு போதை வஸ்து. அந்தப் போதை தெளியும் போது மக்கள் உண்மையை உணர்ந்து கொள்வார்கள்.

அது மலையக மக்களுடன் ஆரம்பித்து விட்டது எனவே எண்ணுகிறேன். அவர்கள் தொண்டமானிடம் இருந்து விலகி வருகின்றார்கள். அண்மையில் நுவரெ லியாவில் நடைபெற்ற தேர்தலில் அதனை அவதானிக்க முடிந்தது.

தோட்டத் தொழிலாளர்கள் ஒரு சில நாட்களுக்கு தொடர்ச்சியாக வேலை நிறுத்தத்தில் ஈடுபடுவார்களானால் அரசால் பதவியில் நீடிக்க முடியாது. மற்றைய துறைகளோடு ஒப்பிடுகையில் தோட்டத் தொழிற்துறை மிகவும் பலமானது. எமது தரப்புக்கு வரக் கூடிய மக்களை சேர்த்துக்கொண்டு நாம் முன்னோக்கி நடைபயில வேண்டும்.

நான் நினைக்கிறேன் விடுதலைப் புலிகள் கூடத்தாக்குப் பிடிப்பர். அவர்கள் இலகுவில் தோற்கடிக்கப்பட மாட்டார்கள். அவர்கள் மீண் டும் பதிலடி தருவர். அவர் களுடைய மன உறுதி ஆயுதங் களையும் விடப் பலமானது.

தென்னிந்தியாவில் உருவாகியுள்ள சூழ்நிலை கூட கவனிக்கத்தக்கது. இத்தகைய பின்னணியில்அனைத்துலகசமூகம்கண்ணைத் திறக்குமானால் நல்ல பலன் கிடைக்கும்.

தொடரும்

# இராணுவ நடவடிக்கைகளை நிறுத்துவதற்கு சர்வதேச நாடுகள் அழுத்தம் கொடுக்கவேண்டும்

(கொழும்பு)

வன்னியில் முன்னெடுக் கப்பட்டு வரும் இராணுவ நடவடிக்கைளினால் மிகவும் மோசமான மனிதாபிமான பிரச்சினை உருவாகியுள்ளதாக சர்வதேச அனர்த்த அமைப்பு சுட்டிக்காட்டியுள்ளது.

வன்னிப் பொதுமக்கள் பாதுகாப்பை கவனத்திற் கொண்டு இராணுவ நடவடிக்கைகள் நிறுத்தப்பட வேண்டும் எனவும், இந்தியப் பிரதமர் மன்மோகன் சிங், அமெரிக்க அதிபர் பராக் ஒபர்மா மற்றும் ஜக்கிய நாடுகளின் செயலாளர் நாயகம் பான் கீ மூன் ஆகியோர் மோதல் தவிர்ப்பை வலியுறுத்த வேண்டும் எனவும் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

இராணுவ நடவடிக்கைகளினால் பாதிக்கப்பட்டுள்ள அப்பாவி பொதுமக்களை பாதுகாப்பதற்கு சர்வதேச நாடுகளின் தலைவர்கள் அழுத்தம் கொடுக்க வேண்டும் எனக் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

மோதல்களின் காரணமாக பல்லாயிரக் கணக்கான பொதுமக்கள் சொல்லொண்ணா துயரங்களை எதிர்நோக்கி வருவதனால் இராணுவ நடவடிக்கைகள் நிறுத்தப்பட வேண்டும் என கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

அப்பாவி தமிழ்ப் பொதுமக்களை பாதுகாக்கும் நோக்கில் அரசாங்கத்தின் இறுதி யுத்த முனைப்புக்கள் நிறுத்தப்பட வேண்டும் என சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. (ஓ-5)

# இலங்கைக்கு பயணிப்பதற்கான அனுமதிக்காக காத்திருக்கின்றேன்

## ஐ.நா. பிரதிநிதி தெரிவிப்பு

(கொழும்பு)

இலங்கைக்கு பயணம் செய்யும் பொருட்டு அந்நாட்டின் அனுமதிக்காக காத்திருப்பதாக நீதிக்குப் புறம்பான படுகொலைகள் தொடர்பான ஆய்வுகளை மேற்கொண்டு அறிக்கை சமர்ப்பிக்கும் ஜக்கிய நாடுகள் சபையின் அதிகாரி பிலிப் அல்ஸ்ரன் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில்,

இலங்கையில் தற்போது தோன்றியுள்ள நிலமை தொடர்பாக ஆராய்வதற்கான பேச்சுக்களை தொடங்குவதே இந்தப் பயணத்தின் நோக்கம். நான் இலங்கைக்கு பயணம் செய்ய வேண்டிய முக்கியத்துவம் குறித்து ஏற்கனவே தெளிவாக இலங்கை அரசுக்கு தெரிவித்து விட்டேன். தற்போது பந்து அரசின் கையில் உள்ளது. இலங்கைக்கான பயணத்திற்கு நான் தயாராக உள்ளேன். அவர்கள் விரும்பினால் பேச்சுக்களை ஆரம்பிப்பதற்கான அழைப்பிதழை அனுப்பலாம்.

வடக்கு மற்றும் கிழக்கில் மனிதாபிமான நெருக்கடிகள் மோசமடைந்து வருகின்றன. மோதல்களினால் துன்பத்தை அனுபவித்து வரும் மக்களின் நலன்களை இலங்கை அரசும் விடுதலைப் புலிகளும் மதித்து பேணுவது முக்கியமானது என்றார் அவர். (ஓ-6)

# மூலவுயிர்க்கல ஆராய்ச்சிக்கு நிதி வழங்க ஒபாமா அங்கீகாரம்

## மனித குளோனிங் செயன்முறைக்கு இடமில்லை



அமெரிக்க ஜனாதிபதி பராக் ஒபாமா பெரும் சர்ச்சைக்குரிய மூலவுயிர்க்கல ஆராய்ச்சிகளுக்கான அரசாங்க நிதி வசதி தொடர்பான கட்டுப்பாடுகளை நீக்கும் ஆணையில் கைச்சாத்திட்டுள்ளார்.

இந்த மூலவுயிர்க்கல ஆராய்ச்சியானது மனித கலப்பிறப்பாக்கத்திற்கு (குளோனிங்) வழிவகுக்கக்கூடும் என பல மதக் குழுவினரும் எதிர்ப்புத் தெரிவித்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

இந்நிலையில் தனது அரசாங்கமானது மனித குளோனிங்கிற்கான வழியொன்றை ஒருபோதும் ஏற்படுத்தித் தராது என்பதை தான் உறுதிப்படுத்துவதாக ஒபாமா கூறினார்.

"துஷ்பிரயோகங்கள் தொடர்பில் நாம் சகிப்புத் தன்மையுடன் இருக்கமுடியாது. இன விருத்திக்காக மனித குளோனிங் செயன்முறைக்குஎமது அரசாங்கம் ஒருபோதும் வழி யேற்படுத்தித் தராது" என தெரிவித்த ஒபாமா, "மனித குளோனிங் தவறானது மட்டுமல்ல அபாயகரமானதும் ஆகும்.

அதற்கு எமது சமூகத்திலோ அன்றி வேறெந்த சமூகத்திலோ இடமில்லை" என்று கூறினார்.

நீரிழிவு, புற்றுநோய் போன்ற நோய்களுக்கான சிகிச்சை தொடர்பில் புதிய கண்டுபிடிப்புக்களை மேற்கொள்வதற்கு விஞ்ஞானிகளை ஊக்குவிக்கும் முகமாகவே மேற்படி ஆணையில் கைச்சாத்திட்டுள்ளதாக ஒபாமா தெரிவித்தார்.

"மருத்துவ அற்புதங்கள் தற்செயலாக நிகழ்பவையல்ல. பெரும் செலவான ஆராய்ச்சிகளின் பெறுபேறாக அவை உள்ளன" என அவர் குறிப்பிட்டார்.

அண்மையில் நடத்தப்பட்ட கருத்துக் கணிப்பு வாக்கெடுப்பொன்றின் பிரகாரம், அமெரிக்கர்களில் அநேகர் இந்த மூலவுயிர்க்கல ஆராய்ச்சிக்கு ஆதரவைக் கொண்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

"இந்த மூலவுயிர்க்கல ஆராய்ச்சியின் பெறுபேறுகள் குறித்து இத் தருணத்தில் முழுமையாக உறுதி கூறமுடியாது" எனத் தெரிவித்த ஒபாமா, "மிகவும் உயிராபத்தான நோய்களைக் குணப்படுத்துவதற்கான சாத்தியப்பாட்டுக்கு இந்த ஆராய்ச்சியானது மிக முக்கியமானது என விஞ்ஞானிகள் நம்பிக்கை கொண்டுள்ளனர்" என்று கூறினார். (ஓ-5)

## சுவாசப் பிரச்சினைகளுக்கு தீர்வாக காவிச் செல்லக் கூடிய நுரையீரல்

சுவாசப் பிரச்சினைகளைக் கொண்டவர்களின் இயல்பு வாழ்க்கைக்கு கைகொடுக்கும் வகையில், காவிச் செல்லக் கூடிய செயற்கை நுரையீரலொன்றை விஞ்ஞானிகள் உருவாக்கியுள்ளனர்.

பிரித்தானிய கவான்ஸி பல்கலைக்கழக விஞ்ஞானிகளால் உருவாக்கப்பட்டுள்ள இந்த காவிச் செலக்கூடிய செயற்கை நுரையீரலானது வளி நுரையீரலினூடாக செல்வதற்கு முன்னர், உடலுக்கு வெளியேயிருந்தே குருதியை ஒட்சியேற்றும் வல்லமை கொண்டதென ஆய்வாளர்கள் கூறுகின்றனர்.

இந்த நுரையீரல் குருதிக்கு ஒட்சிசன் வாயுவை வழங்குவதுடன் குருதிச் சுற்றோட்டத்திலுள்ள காபனீரொட்சைட் வாயுவை வெளியேற்றும் செயற்கிரமத்தை மேற்கொள்ளும் வகையில் வடிவமைக்கப் பட்டுள்ளது. எனினும் இந்த செயற்கை நுரையீரல் தொடர்பில் பல்வேறு மேம்படுத்தல்கள் மேற்கொள்ள வேண்டிய அவசியமுள்ளதால், உச்ச பயனுறுதிப்பாடுள்ள வகையில் அதனை அறிமுகப்படுத்த பல வருடகாலம் செல்லலாம் என அவர்கள் தெரிவித்தனர்.

நுரையீரல் புற்றுநோய், ஆஸ்துமா, வைரஸ் காய்ச்சல்கள் உள்ளடங்கலாக 40க்கு மேற்பட்ட காரணிகள் நுரையீரலின் இயக்கத்தைப் பாதிப்பதாக பிரித்தானிய நுரையீரல் மன்றம் அறிக்கையிட்டுள்ளது. (ஓ-5)

## உலக தரிசனம்

## வில்லியம் ஷேக்ஸ்பியரின் உருவப்படம் வெளியீடு


(அயர்லாந்து)

உலகப் பிரபல நாடக எழுத்தாளரான வில்லியம் ஷேக்ஸ்பியரின் அரிய புகைப்படமொன்று வெளியிடப்பட்டுள்ளது.

400 ஆண்டுகளுக்கு முற்பட்ட இந்த புகைப்படமானது அயர்லாந்திலுள்ள வீடொன்றில் இருந்து கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

வில்லியம் ஷேக்ஸ்பியரின் வாழ்நாளில் வரையப்பட்ட அவரது ஒரேயொரு உருவப்படம் இது எனக் கருதப்படுகிறது.

1610 ஆம் ஆண்டு வில்லியம் ஷேக்ஸ்பியருக்கு 46 வயதாக இருக்கும்போது இந்த உருவப்படம் வரையப்பட்டுள்ளதாக விஞ்ஞானிகள் மூன்று வருட கால ஆராய்ச்சியின் மூலம் உறுதிப் படுத்தியுள்ளனர்.



செல்வந்த குடும்பத்தைச் சேர்ந்த ஷேக்ஸ்பியரின் உயர் சமூக அந்தஸ்தை வெளிப்படுத்துவதாக இந்த உருவப்படம் உள்ளதாகத் தெரிவிக்கப்படு கிறது. வில்லியம் ஷேக்ஸ்பியர் 1616 ஆம் ஆண்டு மரணமடைந்தமை குறிப்பிடத்தக்கது. (ஓ-5)

## கலகத்தை தூண்டுகிறார் நவாஸ் பாகிஸ்தான் அரசு எச்சரிக்கை


(இஸ்லாமபாத்)

நவாஸ் ஷெரீப்புக்கு எதிராக ராஜதுரோக வழக்குப் பதிவு செய்யப்படும் என பாகிஸ்தான் அரசு எச்சரித்துள்ளது.

இது தொடர்பாக பாக். உள்துறை அமைச்சர் ரகுமான் கூறியதாவது, முஷாரப் ஆட்சியில் பதவி நீக்கம் செய்யப்பட்ட நீதிபதிகளை மீண்டும் பதவியில் அமர்த்தக் கோரி, பிரமாண்டமான பேரணி நடத்த வக்கீல்கள் முடிவுசெய்துள்ளனர். அதற்கு முன்னாள் பிரதமர் நவாஸ் ஷெரீப்பின் தூண்டுதலே காரணம்.

கிளர்ச்சியைத் தூண்டும் வகையில், நவாஸ் ஷெரீப் வெளியிடும் அறிக்கைகள், ஆட்சிக்கு எதிராக கலகத்தை உண்டாக்கும் வகையில் உள்ளன.

கிளர்ச்சியைத் தூண்டுவோருக்கு எதிராக கிரிமினல் வழக்குகள் பதிவுசெய்யப்படும் இந்தப் பேரணியின் போது உயிரிழப்பு நிகழ்ந்தாலோ அல்லது சொத்துக்களுக்கு சேதம் ஏற்பட்டாலோ,



அதற்குக் காரணமானவர்கள் மீது ராஜதுரோக வழக்கு பதிவு செய்யப்படும். எதிர்ப்பை தெரிவிக்க ஒவ்வொரு குடிமகனுக்கும் கட்சிக்கும் உரிமை உண்டு. அதே நேரத்தில் சட்டத்தை மீறுவோருக்கு எதிராக கடும் நடவடிக்கை எடுக்கப்படும் என்றார். (ஓ-6)

## உலக வர்த்தக மையக் கட்டட தாக்குதலுக்கு சதித் திட்டம் தீட்டியதாக கைதிகள் ஒப்புதல்

(நியூயோர்க்)

அமெரிக்காவில் நியூயோர்க நகரில் உள்ள வர்த்தக மையக் கட்டடத்தின் மீது விமானத் தாக்குதல் நடத்தியதில் 3 ஆயிரத்துக்கு மேற்பட்டவர்கள் பலியானார்கள்.

இந்த சம்பவத்துக்கு நாங்கள்தான் சதித் திட்டம் தீட்டிக் கொடுத்தோம் என்று கியூபாவில் குவான்டனமோ சிறையில் உள்ள 5 கைதிகள் பொறுப்பு ஏற்றுக்கொண்டனர்.

அவர்களின் வாக்குமூலம் குவாண்டனமோவில் அமெரிக்க கடற்கடை தளத்தில் உள்ள இராணுவ நீதிமன்றில் தாக்கல் செய்யப்பட்டது.

இந்த வாக்குமூலத்தில் காலீத் ஷேக் முகமது உட்பட 5 கைதிகள் கையெழுத்திட்டுள்ளனர். அவர்கள் இந்தத் தாக்குதலை கடவுளுக்கான காணிக்கை என்றும் கூறியுள்ளனர். (ஓ-6)

## ஜேர்மனியில் சைவம் -கிறிஸ்தவம் இணைந்த சிறப்பு வழிபாடு

ஈழத் தமிழரின் பேரவலம் கண்டு தம் உயிர்களை தற்கொடையாக்கி தீக்குளித்த வீரத் தமிழர்களுக்கான, சைவம்- கத்தோலிக்க கிறிஸ்தவம் இணைந்த சிறப்பு வழிபாடு ஜேர்மனியில் நடைபெற்றது.

ஜேர்மனி றைனெ வெற்றிங்கன் நகரில் வாழும் சைவ -கத்தோலிக்க தமிழ் மக்கள் இணைந்து கடந்த ஞாயிற்றுக்கிழமை காலை 10 மணியளவில் இந்த சிறப்பு வழிபாட்டை நடத்தினர்.

முதலில்இறைனீச்சுரம் சிவன் கோவிலில் சைவசமய வழிபாட்டு முறைகளுடன் தமிழ் மொழி மூலம் சிறப்பு வழிபாடு நடைபெற்றது.

இதனை பூசகர் சபாநாத சர்மா சிறப்பாக நடத்தி வைத்து உரையாற்றினார்.

இந்த இறைனீச்சுரம் சிவன் கோவில் தாயகத்தில் வயல்வெளிகளின் நடுவே அமைதியான சூழலில் அமைந்துள்ள சைவக் கோயில்களை நினைவுபடுத்துவதாக இருந்தது.

இதனைத் தொடர்ந்து, அதே கட்டடத்தின் மேல்மாடியில் அமைந்துள்ள கத்தோலிக்க தேவாலயத்தில் அருட்திரு இமானுவேல் அடிகளாருடன், தமிழகத்தைச் சேர்ந்த தற்போது பெல்ஜியத்தில் பணிபுரியும் அருட்திரு ஜீவா லூர்துவும் இணைந்து இலங்கைத் தீவில் சமாதானம் வேண்டியும், தீயில் சங்கமித்தோருக்கான ஆன்ம இளைப்பாற்றிற்காகவும் பிரார்த்தனை செய்தனர்.

ஏறத்தாழ 100 பேர் வரை கலந்து கொண்ட இந்த வழிபாட்டில் உரையாற்றிய இமானுவேல் அடிகளார் இறை வழிபாட்டுடன் நின்றுவிடாமல் விடுதலைப் பயணத்தின் நீண்டபாதையில் தமிழ்மக்கள் தொடர்ந்து தமது பங்கை ஆற்றவேண்டும் என்றும் கேட்டுக் கொண்டார். (ஓ-5)

## மலேசியாவில் பணியில் சேரவிருந்த 70 ஆயிரம் பங்களாதேசத்தவரின் விசா ரத்து

(கோலாலம்பூர்)

உலகப் பொருளாதார மந்த நிலையால், மலேசியாவில் பணியில் சேர இருந்த 70 ஆயிரம் பங்களாதேஷ் பணியாளர்களின் விசாக்களை அந்நாட்டு அரசு நேற்று முன் தினம் ரத்து செய்தது.

இதுகுறித்து மலேசிய உள்துறை அமைச்சர் சயீது ஹமீது அல்பர் கூறுகையில், மலேசியாவில் பணியில் சேர இருந்த பங்களாதேஷ் பணியாளர்களின் விசாக்கள் ரத்து செய்யப்பட்டன. அவர்கள் செலுத்திய ஒரு லட்சம் ரூபாய் பணத்தை ஒவ்வொரு பணியாளருக்கும் திருப்பிக் கொடுக்கப்படும் என்றார்.

இது குறித்து மலேசிய வர்த்தகக் கூட்டமைப்புச் சங்கத்தின் துணைத் தலைவர் ஏ.பாலகிருஷ்ணன் கடந்த திங்கட்கிழமை கூறியதாவது, தற்போது நிலவும் உலகப் பொருளாதார மந்தநிலையால், மலேசியாவில் ஆயிரக்கணக்கானோர், வேலையிழக்கும் அபாயம் ஏற்பட்டுள்ளது. மலேசியாவில் பெருகி வரும் வெளிநாட்டுப் பணியாளர்களால் இந்நிலை மேலும் மோசமடையும்.

எனவே, இதைத் தவிர்க்க மலேசியா வந்தடையாமல் தங்கள் நாட்டிலேயே இருக்கும் வெளிநாட்டுப் பணியாளர்களின் விசாக்களை ரத்து செய்ய வேண்டும் இவ்வாறு பாலகிருஷ்ணன் கூறினார். மலேசியா கட்டுமானம், பண்ணை மற்றும்சேவைத்துறைபோன்றவற்றில் பணியாற்ற வெளிநாட்டுப் பணியாளர்களையே பெருமளவில் சார்ந் துள்ளது.

இதற்கு முன், மனிதவள துறை அமைச்சர் சுப்பிரமணியம் கூறுகையில், "மலேசியாவைச் சேர்ந்தவர்கள் பண்ணைகளில் பணியாற்ற விரும்பாததால், பங்களாதேசத்தவர்கள் அதில் பணியமர்த்தப்படுகின்றனர்" என்றார். (ஓ-5)

# ஆசிரியர்களின் விடுமுறை பற்றிய தகவல்கள்

(நேற்றைய தொடர்ச்சி)

சேவையின் முக்கியத்துவத்தையும் அவசரத் தன்மையையும் கருதியே விடுமுறை வழங்கப்படுகின்றது.

இதனால், அனுமதிக்கப்பட்ட விடுமுறையைக் குறைக்கவோ அல்லது விடுமுறையிலிருக்கும் ஓர் ஆசிரியரைச் சேவைக்கு அழைப்பதற்கோ விடுமுறையை அனுமதிக்கும் அதிகாரிக்கும் உரிமை உண்டு.

லீவை எடுக்கும் முறை, அனுமதித்தல் போன்ற பல்வேறு விடயங்கள் தொடர்பாக அதிபர்கள், ஆசிரியர்கள் தெளிவு பெறாமை காரணமாக பலவித முரண்பாடுகள் பெரும்பாலான் பாடசாலைகளில் காணப்படுகின்றன. இனி லீவு வகைகளையும், லீவு எடுக்கும் முறைகளையும் அவை தொடர்பான விதிகளையும் பார்ப்போம்.

*ஆசிரியர்களுக்கான லீவை பின்வருமாறு வகைப்படுத்தலாம்.*

சமயோசித விடுமுறை, சுகவீன விடுமுறை, பிரசவ விடுமுறை, ஓய்வு விடுமுறை, அரைச் சம்பள, முழுச் சம்பளமற்ற விடுமுறை, விசேட விடுமுறை, கடமை விடுமுறை, அவசர விபத்து விடுமுறை, தந்தையர்களுக்கான விடுமுறை, படிப்பு விடுமுறை, இலங்கைக்கு வெளியே விடுமுறை, குறுகியகால விடுமுறை, அரைநாள் விடுமுறை, பரீட்சை விடுமுறை, இத்தா விடுமுறை, ஆசிரிய உதவியாளர் விடுமுறை, கட்டாய விடுமுறை, இவ்வாறு பலவிதமான லீவுகளை ஆசிரியர்கள் பெற்றுக் கொள்ளலாம். இவைகளோடு தாமதமாக வருதல், குழந்தைகளுக்கு தாய்ப்பால் கொடுத்தல், போன்ற விடயங்கள் தொடர்பாகவும் ஆசிரியர்களும், அதிபர்களும் அறிந்து கொள்ள வேண்டிய விடயங்கள் நிறைய இருக்கின்றன.

விடுமுறை கோரும் போது பின்வரும் தகவல்களை உள்ளடக்கிய விண்ணப்பத்தில் கோருதல் வேண்டும்.

விண்ணப்பதாரியின் பெயர், தேவையான விடுமுறை நாட்களின் எண்ணிக்கை, விடுமுறை தொடங்கும் திகதி, விடு முறைக்கான காரணம், மீண்டும் சேவைக்கு வரும் திகதி, விடுமுறை சமயோசிதமா? சுக யீனமா? கடமையா? என்பது பற்றிய விபரங்கள், விண்ணப்பதாரியின் கையொப்பம், திகதி.

மேலே சொல்லப்பட்ட சகல விடயங்களையும் நிரப்பிய விண்ணப்பப் பத்திரத்தை ஒப்படைக்க வேண்டும். இந்த விண்ணப்பப் படிவம் அரசாங்கத்தால் அல்லது பாடசாலை நிருவாகத்தால் வழங்கப்படுதல் வேண்டும். அல்லது மேற்சொல்லப்பட்ட விடயங்களை உள்ளடக்கி கையெழுத்தில் தயாரிக்கப்பட்ட படிவத்தில் விண்ணப்பிக்கலாம்.

விடுமுறையில் செல்ல முன்னர் கோரிய விடுமுறை அனுமதிக்கப்பட்டிருத்தல் வேண்டும். இரண்டு பிரதிகளில் விண்ணப்பித்து அனுமதி பெற்று பிரதியை விண்ணப்பதாரி வைத்திருத்தல் பாதுகாப்பானது. முன்னறிவித்தல் இன்றி சேவைக்கு வராதிருத்தல் தன்னைத்தானே சேவையிலிருந்து அகற்றிக் கொண்டதற்குச் சமனாகும். எதிர்பாராத சந்தர்ப்பங்களில் விடுமுறையில் நிற்க நேரிட்டால் அன்றே பாடசாலை மூடும் முன்னர் அதிபருக்கு அறிவித்தல் கொடுத்தல் கூடிய விரைவில் அதற்குரிய முறையான விண்ணப்பப் பத்திரத்தில் அனுமதி பெற வேண்டும். தந்தி அடித்தல் ஒரு முறையாகும். ஆனால் இதை தொடர்ந்து செய்ய முடியாது.

அவசரமாக உண்டாகும் சுகவீனத்திற்காக முதல் தினம் லீவை அனுமதிக்காமல் லீவு பெறவேண்டிய சந்தர்ப்பங்கள் உண்டாவதுண்டு. இப்படியான சந்தர்ப்பங்களில் பதிவுத் தபாலில் லீவு கோரி அதிபருக்கு கடிதமொன்று அனுப்புதல் வேண்டும். தந்தி மூலம் இப்படிக் கோரினாலும் இவை லீவு விண்ணப்பத்தில் அனுமதிக்கப்படல் வேண்டும்.

ஆசிரியர்களின் சமயோசித, சுகவீன விடுமுறைகளை பாடசாலை அதிபர் அனுமதிப்பார். அதிபரின் விடுமுறைகளை கோட்டக் கல்விப் பணிப்பாளர் அல்லது வலயக் கல்விப் பணிப்பாளர் அனுமதிக்க வேண்டும். பிரசவ விடுமுறை, சம்பளமற்ற விடுமுறை, சுயரோக குட்ரோக விடுமுறை, இலங்கைக்கு வெளியே விடுமுறையைத் தவிர மற்றைய விடுமுறைகளை வலயக்கல்விப் பணிப்பாளர் அனுமதிக்கலாம். தாபனக் கோவையுடன் தொடர்பு றாத கடமை லீவு போன்ற விடுமுறைகள் கோட்டக்கல்விப் பணிப்பாளரால் அனுமதிக்கப்படலாம். '

**இலங்கைக்கு வெளியே விடுமுறை**

இலங்கைக்கு வெளியே செல்லும் விடுமுறை மாகாண பொதுச் சேவை ஆணைக் குழுவின் விதப்புரையுடன் மாகாண ஆளுநர் / பிரதம செயலாளர் அனுமதிப்பார். வெளிநாட்டுப் படிப்பு விடுமுறை தொடர்பாக கல்வி அமைச்சின் செயலாளரின் அனு மதி பெறப்படல் வேண்டும்.

கல்வி அமைச்சின் 2008/3 இலக்கச் சுற்றறிக்கையின்படி மூன்று மாதங்களுக்கு குறைவான லீவுக்கு அதிபர், வலயக்கல்விப் பணிப்பாளர், மாகாணக் கல்விப் பணிப்பாளரின் சிபார்சுடன் பொது 126 இலக்க விண்ணப்பப் படிவத்தை நிரப்பி சுயவிபரக் கோவை அறிக்கை, நியமனம் நிரந்தரமாக் கப்பட்ட கடிதத்தின் அத்தாட்சிப்படுத்தப்பட்ட பிரதியுடன் விண்ணப்பிக்க வேண்டும்.

கல்வி அல்லது தொழில் சம்பந்தமான மேல் சொல்லப்பட்ட ஆவணங்களுடன் வெளி நாட்டு தொழில் / கல்வி தொடர்பான திகதியிடப் பட்ட கடிதம், அரசாங்கத்திற்கு நிதி பாக்கி இல்லையென உறுதிப்படுத்தப்பட்ட கடிதம், ஒப்பந்த பத்திரம் ஆகியவற்றுடன் விண்ணப்பிக்க வேண்டும். முறையாக வெளிநாட்டு விடுமுறை அனுமதி பெறாத ஆசிரியர்கள் தமது விருப்பப்படி சேவையை விட்டு விலகியவர்களாக கருதப்படுவார்கள்.

தேசிய பாடசாலை ஆசிரியர்களின் வெளிநாட்டு விடுமுறை கல்வி அமைச் சின் செயலாளரால் அனுமதிக்கப்படும். குறைந்த பட்சம் மூன்று மாதங்களுக்கு முன்னர் விண்ணப்பங்கள் வலயக் கல்வி காரியாலயங்களுக்கு ஒப்படைக்கப்பட வேண்டும்.

**சமயோசித விடுமுறை**

நிரந்தர சேவையிலிருக்கும் சகல ஆசிரியர்களும் அவசர, சொந்த தேவைகளுக்காக வருடமொன்றுக்கு 21 நாட்கள் இந்த விடுமுறையைப் பெற்றுக் கொள்ளலாம். இந்த விடுமுறை கோரும் தினத்திற்கு 7 நாட்களுக்கு முன் அதிபருக்கு விண்ணப்பித்து அனுமதி பெற்றுக் கொள்ள வேண்டும்.

வருடமொன்றுக்கு முழுச் சம்பளத்துடன் 21 நாட்கள் இவ்விடுமுறையைப் பெற முடியும். ஒரே முறையில் 6 நாட்களுக்கு மேல் இவ் விடுமுறையைப் பெற்றுக் கொள்ள இயலாது. அத்தியாவசிய அலுவல்களுக்கு 7 நாட்கள் பெற்றுக் கொள்ளலாம்.

***சமயோசித விடுமுறை வழங்கப்படக் கூடிய காரணங்கள் பின்வருமாறு :***

விண்ணப்பதாரரின் சுகவீனம், கிட்டிய குடும்பத்தினரின் சுகவீனம் அல்லது மரணம், குற்றவியல் அல்லது அரசாங்க வழக்குத் தவிர்ந்த ஏனைய வழக்குகளின் பொருட்டு நீதி மன்றங்களுக்குச் செல்வதற்கு, விண்ணப்பதாரரின் சொந்த நலன் கருதிய உத்தியோக ரீதியான நேர்முக பரீட்சைக்காக அலுவலகத்தால் அழைக்கப்படும் போது ஆசிரியரின் விவாகம், கல்வித் திணைக்களத்தின் தொழில் சார்ந்த பரீட்சைகள், அங்கீகரிக்கப்பட்ட பல் கலைக் கழகங்களின் பரீட்சைகளுக்குத்

**ஆசான்**

தோற்றுவதற்கு விடுமுறைகள் கணிக்கப்படும் போது சனிக்கிழமை, ஞாயிற்றுக் கிழமை, பகிரங்க விடுமுறைகள் கணக்கில் எடுத்துக் கொள்ளப்பட மாட்டாது.

**சுகவீன விடுமுறை**

ஆசிரியர்கள் 2 நாட்கள் மட்டும் வைத்திய அத்தாட்சிப் பத்திரம் இன்றியும், அதன் பின்னர் வைத்திய அத்தாட்சிப் பத்திரத்தைச் சமர்ப்பித்தும் இதனைப் பெற்றுக் கொள்ளலாம். முன்னர் 14 நாட்களுக்கு மேல் இதை பெறுவதனால் அரசாங்க வைத்திய அதிகாரியின் வைத்திய அத்தாட்சிப் பத்திரத்தைச் சமர்ப்பித்தல் வேண்டும்.

தற்போது பொது நிர்வாக அமைச்சின் சுற்றறிக்கை, இலக்கம் 27/92, (1992.10.07 திகதி 27/97 (1) (1992.11.11) திகதி ஆகியவற்றின் படி பதிவு செய்யப்பட்ட ஆயுர்வேத வைத்தியர் ஒருவரின் வைத்திய அத்தாட்சிப் பத்திரத்தை சமர்ப்பித்து தேவைப்படும் எவ்வளவு நாட்களுக்கும் இதனைப் பெற்றுக் கொள்ளலாம். (தொடரும்)

# பதவியைத் துறந்து ஐ.தே.கவுடன் இணைந்த எனக்கு அரசுடன் இணையும் தேவை இல்லை

## ஐ.தே.கவின் தேசிய அமைப்பாளர் எஸ்பி தெரிவிப்பு

(கொழும்பு)

அரசியல் ரீதியில் என்னைப் பழிவாங்குவதற்கு சதித்திட்டங்கள் அரங்கேற்றப்படுகின்றன. ஐ.தே.க. தலைவரோடு நெருக்கமாக இருந்து அரசாங்கத்துக்கு துணை போகும் சிலர், நான் அரசாங்கத்துடன் இணையப் போவதாக பொய்ப் பிரசாரங்களை முன்னெடுத்து வருகின்றனர் என்று மத்திய மாகாண சபை உறுப்பினரும் ஐ.தே.க. வின் தேசிய அமைப்பாளருமான எஸ்.பி. திசாநாயக்க தெரிவித்தார்.

நான் ஒரு போதும் ஐ.தே.க.வினை விட்டு வெளியேறப் போவதில்லை. நான் ஜனாதிபதியுடன் தொலைபேசியில் தொடர்பு கொண்டதை நிரூபித்தால் அரசியலிலிருந்து வெளியேறத் தயார் என்றும் அவர் கூறினார்.

பத்தரமுல்லையிலுள்ள தனது வீட்டில் செய்தியாளர் மாநாடொன்றினை நேற்று முன்தினம் நடத்திய போதே எஸ்.பி. திஸாநாயக்க மேற்கண்டவாறு கூறினார்.

இங்கு அவர் மேலும் கூறியதாவது, மத்திய மாகாண சபைத் தேர்தலில் அதிக விருப்பு வாக்குகளை பெற்றேன். ஆனால் ஐ.தே.க. வின் எம்.பி.க்கள் சிலர் முன் வைத்த வேட்பாளர்கள் தோல்வியடைந்துள்ளனர்.

இதனைப் பொறுத்துக் கொள்ள முடியாத கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்கவோடு நெருக்கமாக உள்ள சிலர் அரச தரப்பினரோடு இணைந்து நான் அரசாங்கத்துடன் இணையப் போவதாகவும் அதற்காக ஜனாதிபதியுடன் தொலைபேசியில் பல மணி நேரம் உரையாடியதாகவும் ருக்மன் சேனாநாயக்கவும் இணையவுள்ளாரென்றும் பொய் பிரசாரங்களை மேற்கொள்கின்றனர்.

அரசியல் ரீதியில் என்னை பழிவாங்கும் சதித் திட்டத்தின் நாடகங்கள் பல அரங்கேறப்பட்டு வருகிறது. மத் திய மாகாண சபை தேர் தல் முடிவுற்றவுடன் ஜனா திபதி தொலைபேசி மூலம் வாழ்த்து தெரிவித் தார். நானும் அவருக்கு வாழ்த்துக்களைத் தெரி வித்தேன்.

அவ்வளவு தான் இதன் பின்னர் எந்தவொரு சந்தர்ப்பத்திலும் ஜனாதிபதியுடன் தொலைபேசியில் தொடர்பு கொள்ளவில்லை. அவ்வாறு தொடர்பு கொண்டதை ஆதாரங்களுடன் நிரூபித்தால் அரசியலை விட்டு வெளியேறுவேன்.



அமைச்சர் பதவியையும் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் பொதுச் செயலாளர் பதவியையும் தூக்கியெறிந்து விட்டு ஐ.தே. க.வில் இணைந்தவன்.

எனவே மீண்டும் பொதுஜன ஐக்கிய முன்னணியில் இணையும் தேவை எனக்கில்லை. பதவிகளுக்காகவும் பணத்திற்காகவும் விலை போக மாட்டேன் என்றார். (ஓ-6)

# அரச உத்தியோகத்தர்களுக்கு இலகு முறை கடன் திட்டம்

யாழ்ப்பாணம் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம் அரசாங்க உத்தியோகத்தர்களின் வசதி கருதி இலகுமுறை கடன் திட்டம் ஒன்றை ஆரம்பித்துள்ளது.

சங்கத் தலைவர் இதனை ஆரம்பித்து வைத்துள்ளார். அரச திணைக்களங்களில் பணியாற்றும் பணியாளர்கள், ஓய்வூதியர்கள் மற்றும் வங்கிப் பணியாளர் ஆகியோர் இந்த இலகு கடன் வசதி மூலம் தமக்குத் தேவையான பொருட்களை சங்கத்தில் கொள்வனவு செய்ய முடியுமென்று தெரிவித்துள்ள சங்கத் தலைவர் இத்திட்டத்தில் இணைய விரும்பும் அரச பணியாளர்கள் திணைக்கள தலைவரின் சிபாரிசுக் கடிதத்தையும் இணைக்கும் படி கேட்டுள்ளார். (ஓ-6)






ஆசிய மருத்துவ டாக்டர் சங்கத்தால் (AMDA) சார்க் நாடுகளுக்கான அவசர நிவாரண, செயற்பாடுகளை மேற்கொள்வது தொடர்பான சர்வதேச மகாநாடு அண்மையில் மணிப்பாலில் இடம்பெற்றது.

இந்நிகழ்வை AMDA வின் சர்வதேச தலைவர் டாக்டர் சிகேனுசுகநாமி மங்கல விளக்கேற்றி ஆரம்பித்து வைப்பதையும் அருகில் ஒகாமா பல்கலைக்கழக பேராசிரியர் கிறேயுக்கி டோய், மணிக்பால் பல்கலைக்கழக தலைவரும் பீடாதிபதியுமான டாக்டர். வலாலால், பதிவாளரும் நிறைவேற்றுப் பணிப்பாளருமான டாக்டர். எச். வினோத் வாத், AMDA இந்தியா உறுப்பினரும் மணிப்பால் பல்கலைக்கழக டாக்டருமான டாக்டர் எம். எஸ். கமாத்பங்களார் ஆகியோர் நிற்பதை முதலாவது படத்திலும், சென். ஜோன்ஸ் அம்புலன்ஸின் யாழ். மாவட்ட ஆணையாளர் எஸ். செல்வரஞ்சனுக்கு மணிப்பால் பல்கலைக்கழக பீடாதிபதி டாக்டர் எச்.எச். வலாலால் சான்றிதழ் மற்றும் நினைவுச்சின்னம் வழங்குவதை இரண்டாவது படத்திலும் காணலாம்.

தவறைச் சரிப்படுத்திக் கொள்ள பிரயாசைப் படுவதால் அவமானம் கிடையாது.

– ராஜாஜி

வலம்புரி

# ஈழத்தமிழருக்குச் சார்பான அத்வானி-ஜெயா உரை

இந்தியப் பொதுத் தேர்தலுக்கான காலம் நெருங்கிவரும் இவ் வேளையில் ஈழத்தமிழர்களின் விவகாரம் இந்தியத் தேர்தலில் காத்திரமான தாக்கத்தைச் செலுத்தும் என ஆய்வாளர்கள் கருதுகின்றனர்.

காங்கிரஸ் ஆட்சியில் எதிர்பார்த்தவை கிடைக்கவில்லை என்ற கருத்து பொதுவானதாக இருக்கின்ற போதிலும் காங்கிரஸ் ஆட்சியில் இந்திய வெளிவிவகாரக் கொள்கைகள் இந்தியாவின் வல்லாதிக்கத்துக்கு ஆரோக்கியமானதல்ல என்ற கருத்தும் உண்டு.

இந்நிலையில் தமிழகத்தில் காங்கிரஸின் வெற்றி என்பது ‘இல்லை’ என்ற முடிபை நிறுத்திட்டமாகக் கூறுவதற்கு ஈழத்தமிழர்களின் விவகாரம் அமைந்துள்ளது.

இதிலிருந்து காங்கிரஸ் கட்சியுடன் கூட்டுச் சேரும் கட்சிக்கும் தமிழகத்தில் தோல்வி காத்திருக்கிறது என்ற அனுமானத்தை நாம் கூற முடியும்.

அவ்வாறாயின் காங்கிரஸுடன் கூட்டுச் சேரும் கலைஞர் மு.கருணாநிதி தலைமையிலான தி.மு.க. தமிழகத்தில் தோல்வியைச் சந்திக்கும் வாய்ப்பு அதிகமாக இருக்கும் என்று துணிந்து கூறலாம்.

ஆக, தி.மு.கவுக்கு தோல்வியாயின் வெற்றி செல்வி ஜெயலலிதாவின் அ.தி.மு.கவிற்கு என்பதில் மாறுபட்ட கருத்திற்கு இடமில்லை.

காங்கிரஸ் தி.மு.கவுடன் கூட்டுச் சேர்ந்தால் அத்வானி தலைமையிலான பாரதிய ஜனதாக் கட்சி ஜெயலலிதாவின் அ.தி.மு.கவுடன் கூட்டுச் சேரும்.

இவ்வாறு இரு கட்சிகளும் கூட்டுச் சேர்வதனால் எங்களுக்கு என்ன இலாபம் என உங்கள் நா கேள்வி கேட்கத் துடிப்பதும் தெரிகிறது.

இங்குதான் ஒரு முக்கியமான விடயம் உண்டு. அதாவது ஈழத்தமிழர் விடயத்தில் காங்கிரஸ் கட்சி தகுந்த நடவடிக்கையை எடுக்கத் தவறிவிட்டது.

ஈழத்தமிழருக்கு ஏற்பட்ட இத்துணை இழப்புகளுக்கும் ஆளும் காங்கிரஸ் கட்சியே காரணம்.

பாரதிய ஜனதாக் கட்சி ஆட்சிக்கு வந்தால் நூறு நாட்களில் ஈழத்தமிழரின் பிரச்சினைக்குத் தீர்வு காணும் என தமிழகத்தில் நடந்த தேர்தல் பிரசாரம் ஒன்றில் பாரதிய ஜனதாக் கட்சியின் தலைவர் அத்வானி கூறியிருந்தார்.

இதற்கு மேலாக இலங்கைத் தமிழருக்கு ஆதரவாக உண்ணாவிரதம் இருந்த செல்வி ஜெயலலிதா, சுயநிர்ணய அதிகாரம் கொண்ட தனித் தமிழ் நாடே ஈழத்தமிழர் பிரச்சினைக்குத் தீர்வாகும் என பட்டவர்த்தனமாகக் கூறியுள்ளார்.

அவ்வாறாயின் அத்வானி –ஜெயா கூட்டும் தேர்தலில் வெற்றியும் அடைந்து ஆட்சிப் பீடமேறினால் அது ஈழத்தமிழருக்கு சாதகமாக அமையும் என்பதில் சந்தேகமில்லை.

# புல்மோட்டை இந்திய வைத்திய சேவை குறித்த ஜே.வி.பியின் குற்றச்சாட்டு அர்த்தமற்றது

## அமைச்சர் லக்ஷ்மன் யாப்பா அபேவர்தன விளக்கம்

(கொழும்பு)

வடக்கில் யுத்தத்தினால் காயமடையும் மக்களுக்கு சிகிச்சையளிப்பதற்கென்ற பெயரில் புல்மோட்டையில் அமைக்கப் படவுள்ள இந்தியாவின் வைத்தியசாலையானது உண்மையிலேயே இந்திய இராணுவத்தின் முகாமாகும் என்று மக்கள் விடுதலை முன்னணி குற்றஞ்சாட்டுவதில் எவ்வித உண்மையும் இல்லை என ஊடகத்துறை அமைச்சர் லக்ஷ்மன் யாப்பா அபேவர்தன தெரிவித்தார்.

தேசிய அபிவிருத்தி ஊடக மத்திய நிலையத்தில் நேற்று முற்பகல் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின் போது ஊடகவியலாளர் ஒருவரின் கேள்விக்கு பதிலளிக்கையிலேயே அமைச்சர் இதனைக் குறிப்பிட்டார். அமைச்சர் தொடர்ந்து கூறுகையில்,

ஏதாவதொரு நல்ல திட்டம் முன்வைக்கப்பட்டால் அதற்கு எதிர்ப்புத் தெரிவிப்பதை மக்கள் விடுதலை முன்னணி ஒரு வழக்கமாகக் கொண்டுள்ளது. வீணான ஓர் அச்சத்தை ஏற்படுத்திக்கொண்டு முதற்கட்ட தீர்மானங்களை எடுத்து எதிர்ப்பையே தெரிவிக்கின்றது. பின்னர் உன்மையை உணர்ந்து அதனை ஏற்றுக்கொள்கின்றது.

இந்திய இராணுவம் இங்கு வரும்போது பல பிரச்சினை ஏற்படும் என்றும் இந்திய இராணுவத்தை திருப்பி அனுப்ப உடன் நடவடிக்கை எடுக்க வேண்டும் எனவும் மக்கள் விடுதலை முன்னணி குரல் கொடுத்தது. அதேபோன்று எண்ணெய்த் தாங்கிகள் விடயத்திலும் பல கருத்துக்களைத் தெரிவித்தது.

இதற்கு மாகாண சபை மற்றுமொரு நல்ல உதாரணமாகும் மாகாண சபை அறிமுகப்படுத்தப்பட்ட போது இதனால் நாடு பிளவு படும் என்று மக்கள் விடுதலை முன்னணி கூக்குரலிட்டது. பின்னர் அதனை ஏற்றுக்கொண்டு அவர்களும் மாகாணசபை தேர்தலில் போட்டியிட்டு உறுப் பினர்களாக்வும் பதவி வகிக்கின்றனர்.

இல்லாத ஒரு அச்சத்தை ஏற்படுத்திக் கொண்டு ஆரம்பக் கருத்துக்களை அவர்கள் தெரிவிக்கின்றனர். நாட்டின் இறைமைக்கு பாதிப்பு ஏற்படும் வகையிலான எந்தவொரு நடவடிக்கையையோ திட்டத்தையோ அரசாங்கம் அனுமதிப்பதில்லை.

நாட்டின் இறைமைக்கு பாதிப்பு ஏற்படும் என்ற அச்சம் தோன்றிய சந்தர்பங்களில் வெளிநாட்டுத் தூதுவர்கள் சிலரையும் அரசாங்கம் நாட்டைவிட்டு வெளியேற்றியுள்ளது. எனவே அரசாங்கத்தின் திட்டம் குறித்து வீணான அச்சத்தை ஏற்படுத்திக் கொள்ளத் தேவையில்லை என அமைச்சர் மேலும் தெரிவித்தார். (ஓ-6)

# குண்டுத்தாக்குதலில் கொல்லப்பட்டவர்களுக்கு நட்ட ஈடு வழங்க உடனடி நடவடிக்கை

## அமைச்சர் றிஷாட் தகவல்

(கொழும்பு)

அக்குரஸ்ஸ - கொடப்பிட்டிய குண்டுத்தாக்குதல் சம்பவத்தில் கொல்லப்பட்டவர்களுக்காகவும் காயமடைந் தவர்களுக்கும் உரிய நட்ட ஈட்டினை வழங்க உரிய நடவடிக்கை மேற்கொண்டுள்ளதாக மீள்குடியேற்ற அனர்த்த நிவாரண சேவை கள் அமைச்சர் றிஷாட் பதியுதீன் தெரிவித்தார்.

பாதிக்கப்பட்டவர்களின் விபரங்களைப் பெற்று அவர்களுக்கு உடனடியாக நட்ட ஈடு பெற்றுக்கொடுக்கப்படும் என்று அமைச்சர் தெரிவித்தார். இதேவேளை, கொடப்பிட்டிய தற்கொலைக் குண்டுத் தாக்குதலை அமைச்சர் றிஷாட் வன்மையாகக் கண்டித் துள்ளார்.

மத விவகாரத்துடன் தொடர்புடைய வைபவத்தில் நடத்தப் பட்ட மிலேச்சத்தனமான தாக்குதல் என்று தெரிவித்த அமைச்சர் எவர் இதனைச் செய்திருந்தாலும் வன்மையாகக் கண்டிப்பதாகக் கூறினார். (ஓ-6)

# வெள்ளவத்தையில் இளம் ஆசிரியை வெள்ளை வானில் கடத்தல்

வெள்ளவத்தைப் பகுதியில் கடந்த செவ்வாய்க்கிழமை மாலை இளம் ஆசிரியை ஒருவர் வெள்ளை வானில் வந்தோரால் கடத்திச் செல்லப்பட்டுள்ளார்.

இது தொடர்பாகத் தங்களிடம் உறவினர்கள் முறைப்பாடு செய்துள்ளதாக மக்கள் கண்காணிப்புக்குழுவின் அமைப்பாளரும் கொழும்பு மாவட்ட எம்.பி.யுமான மனோகணேசன் தெரிவித்துள்ளார்.

வெள்ளவத்தை பஸில்ஸ் ஒழுங்கையில் தனது சிநேகிதி ஒருவருடன் வந்த ராஜகிரிய றோமன் கத்தோலிக்க தமிழ்க் கலவன் பாடசாலையில் கல்வி கற்பிக்கும் 31 வயதான ஆசிரியையே வெள்ளை வானில் வந்தோரால் கடத்திச் செல்லப் பட்டுள்ளார். எனினும் கடத்தல்காரர்கள் ஆசிரியை யின் சிநேகிதியை எதுவும் செய்யவில்லை எனத் தெரிவிக்கப்படுகின்றது.இந்தக் கடத்தல் தொடர்பாக ஆசிரியையின் உறவினர்கள் தன்னிடம் முறைப்பாடு செய்துள்ளதாக மனோகணேசன் தெரிவித்தார். இது தொடர்பாக ஆசிரியையின் உறவினர்கள் வெள்ளவத்தை பொலிஸ் நிலையத்திலும் முறைப்பாடு செய்துள்ளனர். (ஓ-6)

# தற்கொலைத் தாக்குதல் பற்றி விசாரிக்க மூன்று பொலீஸ் குழுக்கள் நியமனம்

## பொலிஸ்மா அதிபர் ஜயந்த விக்ரமரத்ன தகவல்

(கொழும்பு)

மாத்தறை, அக்குரஸ்ஸவில் நேற்று முன்தினம் இடம் பெற்ற தற்கொலைத் தாக்குதல்கள் தொடர்பாக விசாரணைகளை மேற்கொள்ள 3 பொலிஸ் குழுக்கள் நியமிக்கப் பட்டுள்ளதாக பொலிஸ்மா அதிபர் ஜயந்த விக்ரமரத்ன தெரிவித்துள்ளார்.

தென் மாகாணத்துக்குப் பொறுப்பான பிரதிப் பொலிஸ்மா அதிபர் ஜயந்த அபேசூரிய தலைமையில் விசாரணைகள் இடம்பெற்று வருவதாகவும் அவர் மேலும் குறிப்பிட்டார்.

மாத்தறை, அக்குரஸ்ஸ ,கொடப்பிட்டிய ஜும்ஆப் பள்ளிவாசலில் நேற்று முன்தினம் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த தேசிய மீலாதுன் நபி விழாவின் அங்குரார்ப்பண நிகழ்ச்சி ஆரம்பமாவதற்கு சற்று நேரத்துக்கு முன்னர் பள்ளிவாசலுக்கு அருகில் இந்த தற்கொலைக் குண்டுத் தாக்குதல் இடம்பெற்றது.

புலிகள் மேற்கொண்ட இந்தத் தாக்குதலில் தற்கொலைக் குண்டுதாரி உட்பட 14 பேர் கொல்லப்பட்டதோடு தபால், தொலைத் தொடர்புகள் அமைச்சர் மஹிந்த விஜேசேகர உட்பட 51 பேர் காயமடைந்தமை குறிப்பிடத்தக்கது. (ஓ-6)

# பயங்களை நீக்கும் கவசம் பாபா நாமம்

ஒரு நாள் சேது மாதவன் என்பவருக்கு ஒரு கடிதம் வந்தது. அக்கடிதம் இரத்தம் தோய்த்து எழுதப்பட்டு எலும்பை குறுக்காக போட்டு மண்டையோடு வரைந்த கடிதம் ஆகும். பஜனையை நிறுத்தி விடு, மக்களை ஏமாற்றுகிறாய். இந்த



எச்சரிக்கை கடிதம் கிடைத்து ஏழு நாட்களுக்குள் நீ பஜனையை நிறுத்தா விட்டால் உன் தலை சீவப் படும் என அதில் குறிப்பிட்டிருந்தது. சேது மாதவனோ இக் கடிதத்தால் எதுவித பயமும் அடையவில்லை. எல்லா பயமுறுத்தல்களையும் எதிர்த்து நிற்கும் கவசம் ஒன்று உண்டு அது தான் பாபாவின் நாமம். பஜனையை தொடர்ந்து செய்தார்.

இதனால் கோபம் கொண்ட நக்ஸலைட் தன் சதித்திட்டத்தை நிறைவேற்ற முடிவு செய்து கொண்டு நடு இரவு, திருடனைப் போல அவர் வீட்டை நெருக்கினான். அவன் யன்னல் வழியே எட்டிப் பார்க்கையில், சேதுமாதவன் குளிக்கும் அறையில் கை கழுவிக்கொண்டிருந்தார். வெறுப்பு நிறைந்த உள்ளத்தோடு அந்தக் குற்றமற்ற மனிதனை நோக்கி குறிபார்த்து கொடுவாளை வீசினான். பாபா எங்கும் நிறைந்தவர் அல்லவா?

நடந்தவை பற்றி சேது மாதவனே கூறுகிறார். சிவப்பு நிற சுழற் காற்று தன் முன் தோன்றியது. மிருதுவான ஒரு கரம் தன்னைப் பிடித்து அறையின் மூலையில் தள்ளியது. அப்போது அக்கொடுவாள் தரையில் படார் என விழுவதையும், யாரோ ஒருவன் வேகமாக ஓடும் காலடிச் சத்தமும் கேட்டது. இச் சத்தத்தைக் கேட்டு மனைவி ஓடி வந்தாள். அவர் இருந்த அறைக்குள் இனிய மணம் வீசுவதை அவர்கள் இருவரும் உணர்ந்தனர். மாதவனின் உடல் முழுவதும் விபூதி நிறைந்திருந்தது. மாதவனால் ஒன்றும் பேச முடியாது. பிரமிப்பில் ஆழ்ந்திருந்தார். அங்கு வந்திருந்தது கொலைகார நக்ஸலைட்டும், சர்வ வியாபியான பகவான் பாபாவும் என்பதை அறிந்த அவர்கள் ஆனந்தக் கண்ணீர் வடித்தனர்.

சாயி எனும் தெய்வம் நமது இலட்சியம்; **யாதவன்**

மேலான நம் பிக்கை அனைத்தும் ஒன்று திரண்டு பாபா எனும் நாமத் தோடு, ஒரு சிறிய மனிதக் கூட்டுக்குள் அடங்கியிருக்கிறது நாம் அகங்காரத்தை விட்டு பகவானை அங்கீகரிக்க வேண்டிய அவசியத்தையே மேற்கூறிய நிகழ்ச்சி தெளிவுபடுத்துகிறது. தன்னிடம் உள்ள அகங்காரத்தை உதறித்தள்ளி பகவானிடம் முழுமையாக ஒப்புவிக்கும் மனிதனால் தான், மனிதனே கடவுள் ; கடவுளே மனிதன் என்ற தெய்வ இரகசியத்தை உணர முடியும்.

*ஜெய் சாயிராம்*

# இலங்கையில் ஆயுத மோதலுக்கு தீர்வு காணாமல் மக்களை மீட்கும் முயற்சி தோல்வியையே அளிக்கும்

## பா.ம.க.நிறுவுனர் இராமதாஸ் தெரிவிப்பு



(கொழும்பு)

**இலங்கையில் ஆயுத மோதலுக்கு தீர்வு காணாமல் போர் பகுதியில் சிக்கியிருக்கும் மக்களை மீட்க போகிறோம் என்று படையை அனுப்பி வைத்தால் தோல்விதான் ஏற்படும் என்று டாக்டர் இராமதாஸ் தெரிவித்துள்ளார். இது தொடர்பாக பா.ம.க. நிறுவனர் டாக்டர் இராமதாஸ் வெளியிட்டுள்ள அறிக்கை யில் கூறியிருப்பதாவது,**

இலங்கை போர் பகுதியில் சிக்கியுள்ள தமிழ் மக்களை வெளியேற்றிவிட்டால், அவர்களது உரிமைகளுக்காக போராட்டக் களத்தில் நிற்கும் போராளிகளை அழிப் பதற்கு எளிதாக இருக்கும் என்று இலங்கை அரசு கருதுகிறது.

இதற்கு இந்தியாவின் ஆதரவையும். அமெரிக்காவின் உதவியையும் இலங்கை அரசு நாடியிருப்பதாக தகவல்கள் தெரிவிக்கின்றன. இத்தகைய சூழ்நிலையில், இந்திய வெளியுறவுத்துறை செயலாளர் சிவ்சங்கர் மேனன் அமெரிக்கா சென்றிருக்கிறார்.

வன்னிப்பகுதியில் உள்ள 2 இலட்சத்திற்கும் அதிகமான தமிழ் மக்களை அங்கிருந்து வெளியேற்ற அமெரிக்காவின் தலைமையில் கூட்டு நடவடிக்கை மேற்கொள்வது தொடர்பாக சிவ்சங்கர் மேனன், அமெரிக்க அதிகாரிகளுடன் பேச்சு நடத்துவதாக செய்திகள் வெளிவந்திருக்கின்றன.

தமிழ் மக்களை அவர்களது பிறந்த இடத்தை விட்டு வெளியேற வேண்டும் என்று சொல்லுவதும், அவர்களை கட்டாயமாக வெளியேற்ற முற்படுவதும் ஈழத் தமிழர்களின் அரைநூற்றாண்டுகால போராட்டத்தை அவமதிப்பதாகும். தமிழ் மக்களை அவர்களின் சொந்த இடத்தில் இருந்து வெளியேற்றி இலங்கை படையினரின் சித்திரவதை முகாம்களில் அடைத்திட முற்படும் எந்த நடவடிக்கைக்கும் இந்தியா ஆதரவு அளிக்கக் கூடாது.

பாகிஸ்தான் ஒரு பக்கம் பகையாக இருக்கிறது. பங்களாதேஷ் இன்னொரு பக்கத்தில் பகைமை பாராட்டுகிறது. சீனா எந்த நேரத்திலும் பகை கொள்ளும் என்ற நிச்சயமற்ற நிலை இருந்து கொண்டிருக்கிறது.

இத் தகைய நிலையில் இந்தியாவின் தெற்கு பக் கத்தில் இருக்கும் இலங்கையும் தனக்கு பகையீக மாறிவிடக் கூடாது என்ற ஒரு காரணத்திற்காக, இன படுகொலை நடத்தும் இலங்கை அரசுக்கு இந்தியா துணை போய்க்கொண்டிருக்கிறது. இந்த நிலைப்பாடு இந்திய வெளியுறவுத்துறை மேற்கொள்ளும் மிக பெரிய மோசமான தவறாகும்.

இலங்கை அரசின் பாசிச அராஜக நடவடிக்கைகளுக்கு இந்தியா வெளிப்படையாகவோ, மறைமுகமாகவோ துணை நிற்பதை தமிழ்நாட்டில் இருக்கும் 7 கோடி தமிழர்களும் விரும்பவில்லை.

தமிழகத்தில் 7 கோடி தமிழர்கள் இருக்கிறார்கள் என்றால், அவர்களின் 14 கோடி கரங்களும் ஈழத் தமிழர்களின் கண்ணீரைத் துடைப்பதற்கு இன்று தயாராக இருக்கிறது. இந்த உணர்வை புரிந்து கொண்டு அதற்கு மதிப்பளிக்கும் வகையில், இந்திய அரசு தனது கொள்கைகளையும், நடவடிக்கைகளை யும் அமைத்துக் கொள்ள வேண்டும்.


இலங்கையில் போரை நிறுத்த நடவடிக்கை மேற்கொள்ளாமல், போர் பகுதியில் சிக்கித் தவிக்கும் மக்களை மீட்கப் போகிறோம் என்று புறப்பட்டால், சோமாலியாவில் ஏற்பட்ட தோல்விதான் இலங்கையிலும் ஏற்படும் என்பதை இந்தியாவும், அமெரிக்காவும் மறந்துவிடக் கூடாது என்றார். (ஓ-6)

### பாரதச் செய்திகள்



ஈழத்துயர் தாங்க முடியல....

## ஈழத்தமிழர்கள் நாதியற்றவர்கள் இல்லை மதி.மு.க. பொதுச்செயலர் வைகோ தெரிவிப்பு



(சென்னை)

இலங்கைத் தமிழர் பாதுகாப்பு இயக்கம் சார்பில் வேலூரில் நடைபெற்ற பொதுக்கூட்டத்தில் ம.தி.மு.க. பொதுச்செயலர் வைகோ உரையாற்றுகையில்,

தமிழர்கள் வசிக்கும் பகுதியில் 4 பக்கமும் எதிரிகள் ஆயுதங்களுடன் நிற்கிறார்கள். நம் வரிப்பணத்தில் தயாரிக்கப்பட்ட இந்திய ஆயுதங்கள் இலங்கை இராணு வத்தின் கைகளில் இருக்கிறது. இதுபோல் பாகிஸ்தான் , சீனா,இஸ்ரேல் போன்ற நாடுகளின் ஆயுதங்களும் அவர்களது கைகளில் இருக்கின்றன.

இந்த நிலையில் வெளியுறவுத் துறை மந்திரி பிரணாப் முகர்ஜி பாராளுமன்றத்தில் பேசும் போது கிளிநொச்சி விழுந்துவிட்டது. முல்லைத்தீவு பிடிபட்டது. ஆனையிறவு சாய்ந்தது என்று கூறினார். இலங்கையில் ராஜபக்ஷ சொல்வதை போல் டெல்லியில் பிரணாப் முகர்ஜி கூறியிருக்கிறார். இத்தனையையும் சொல்லிவிட்டு தமிழர்களிடம் வந்து வாக்கு கேட்கிறார்கள்.

பாதிக்கப்பட்ட தமிழர்களுக்க மறுவாழ்வு கொடுக்கப் போகிறார்களாம். சுடுகாட்டில் மறுவாழ்வு கொடுத்து என்ன பயன்? ஈழத்தமிழர்களுக்கு கொடுப்பதற்காக மத்திய அரசு சார்பில் மருந்து ஏற்றிக்கொண்டு கப்பல் இலங்கைக்கு செல்கிறது. அதை இலங்கை மந்திரி பெற்றுக்கொள்கிறார். அந்த மருந்துகள் இலங்கையில் பாதிக்கப்பட்ட தமிழர்களுக்கு போய்ச் சேருமா? இலங்கையில் போரை நிறுத்தும் படி மத்திய அரசு இதுவரை சொல்லவில்லை.

போரை நிறுத்தச் சொல்லி உலகில் 100க்கும் மேற்பட்ட நாடுகள் இலங்கைக்கு சொல்லிவிட்டன, ஆனால் மத்திய அரசு இதுவரை சொல்லவில்லை. இதனால் உலக நாடுகளுக்கு இடையே குழப்பம் ஏற்ட்டு விட்டது. இதற்காக தான் நாங்கள் கையெழுத்து இயக்கத்தை அறிவித்து இருக் கிறோம்.

மருந்து இல்லாமல், உணவு இல்லாமல் ஒவ்வொரு நாளும் எத்தனையோ ஈழத் தமிழக்கள் செத்துக்கொண்டு இருக்கிறார்கள். தமிழர்கள் நாதியற்று போகவில்லை. 7 1/2 கோடி தமிழர்கள் நினைத்தால் இலங்கை அரசை தண்டிக்க முடியாதா? இலங்கை அரச தலைவர் ஒரு நாளில் கூண்டில் நிறுத்தப்படுவார் அப்போது வட்டியும் முதலுமாக அவருக்கு கொடுக்காமல் விடமாட்டோம். கடந்த 5 ஆண்டுகளாக மத்திய அரசு ஈழத்தமிழர்களுக்கு துரோகம் செய்துவருகிறது. அதற்கு என்ன காரணம்? ஏவி இருப்பது காங்கிரஸ் கட்சியும் அதன் தலைமையும் தான் என்று தெரிவித்தார். (ஓ-5)

## ஐ.நா.ஈழத்தமிழருக்கு பாதுகாப்பு வழங்க மத்திய அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும்

(சென்னை)

இலங்கை போர் முனையில் சிக்கியுள்ள தமிழர்களை மீட்க ஐ.நா.. சபையின் மேற்பார்வையில், முகாம்களை அமைத்து அவர்கள் பாதுகாப்பை உறுதி செய்ய மத்திய அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று விஜயகாந்த் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

இது குறித்து அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில் இலங்கை போர் முனையில் இரண்டு இலட்சத்திற்கும் மேற்பட்ட தமிழ் மக்கள் சிக்கியுள்ளனர். இவர்களுக்கு உணவு, இருப்பிடம், மருத்துவ வசதி போன்றவை அறவே இல்லை. இவர்களின் நிலைபற்றி குறிப்பிட்டுள்ள செஞ்சிலுவைச் சங்கம் மிகப்பெரிய மனித பேரழிவு காத்திருக்கிறது என்று குரல் எழும்பியுள்ளது.

இலங்கை அரசு விரைவில் தமிழர்களை அழித்து வெற்றி பெற முடியும் என்று நம்புகிறது. போரை நிறுத்தி பொதுமக்களை பாதுகாப்பான இடத்திற்குக் கொண்டுவர வேண்டும் என உலக நாடுகள் வலியுறுத்தியும். இலங்கை அரசு அதற்கு மறுப்பு தெரிவித்துள்ளது. விடுதலைப்புலிகள், போர் நிறுத்தத்திற்கு தயாராக உள்ளதாக தெரிவித்துள்ளனர். ஆனால் ஆயுதங்களை கீழே போட்டு விட்டுசரணடையும் வரைபோர்நிறுத்தம் இல்லை என இலங்கை அரசு தெரிவித்துள்ளது.

ஏப்ரல் மாதம் வரும் சிங்கள புத்தாண்டு தினத்திற்குள் தமிழர்களை அழித்துவிட்டு தங்களது புத்தாண்டு தினத்தை வெற்றித் திருநாளாக கொண்டாட திட்டமிட்டுள்ளனர். ஐக்கிய நாடுகள் சபை பிரதிநிதிகளோ, இதர நாடுகளின் தூதர்களோ, பத்திரிகையாளர்களோ, போர் நடக்கும் பகுதிகளுக்கு அனுமதிக்கப்படுவதில்லை. தமிழர்கள் எல்லோரையும் கொன்று குவித்துவிட்டு குறைந்த கணக்கையே வெளி உலகிற்கு காட்ட இலங்கை அரசு விரும்புகிறது.

போர்முனையில் சிக்கியுள்ள தமிழர்களை மீட்க ஐ.நா. சபையின் மேற்பார்வையில், முகாம்களை அமைத்து, அவர்கள் பாதுகாப்பை உறுதி செய்ய மத்திய அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும் இவ்வாறு விஜயகாந்த் தெரிவித்துள்ளார் . (ஓ-6)

## இலங்கையில் போர் நிறுத்தம் செய்ய பிரான்ஸ் உதவக் கோரி வைகோ மனு

(புதுச்சேரி)

இலங்கையில் போர் நிறுத்தம் செய்ய பிரான்ஸ் அரசு நடவடிக்கை எடுக்க வலியுறுத்தி ம.தி.மு.க. பொதுச் செயலர் வைகோ புதுச்சேரியில் உள்ள பிரான்ஸ் தூதரிடம் மனு அளித்தார்.

இலங்கைத் தமிழர் பாதுகாப்பு இயக்கம் சார்பில் ம.தி.மு.க.பொதுச் செயலர் வைகோ, பழ நெடுமாறன், எம்.பி.இராமதாஸ், தமிழக எம். எல்.ஏ.ரவிக்குமார், எம்.எல்.ஏ.க்கள் நாரா கலைநாதன், அனந்தராமன் ஆகியோர் நேற்று முன்தினம் காலை புதுச்சேரியில் பிரான்ஸ் நாட்டின் தூதர் ஜெனரல் ஜூலியோ ராயட்டி டம் மனு அளித்தார்.

பின் நிருபர்களிடம் வைகோ கூறியதாவது, இலங்கையில் தமிழ் இனம் படுகொலை செய்யப்படுகிறது. இலங்கை அரசின் இராணுவ தாக்குதலால் குழந்தைகள், பெண்கள் உள்ளிட்டோர் கொல்லப்பட்டு வருகின்றனர். மருத்துவமனைகளில் இருப்போரும் படுகொலை செய்யப்படுகின்றனர்.

இலங்கையில் போரை நிறுத்துவதற்கு பிரான்ஸ் அரசாங்கம் ஐரோப்பிய ஒன்றியத்தின் மூலமாகவும், ஐ.நா. சபையின் மூலமாகவும், ஐ.நா. பாதுகாப்பு கவுன்சில் மூலமாகவும் உடனடி நடவடிக்கை எடுக்க வேண்டும் என கேட்டுக்கொண்டோம். பிரான்ஸ் அரசாங்கம் அதிக அக்கறை எடுத்து ஐ.நா. மூலம் இலங்கையில் போர் நிறுத்தம் கொண்டுவர நடவடிக்கை எடுப்பதாக பிரான்ஸ் தூதுவர் உறுதி அளித்துள்ளார் என்றார். (ஓ-6)

## ஈழத்தமிழர்களுக்கு காங்கிரஸ் சார்பில் நிவாரணப் பொருட்கள்

### தங்கபாலு தெரிவிப்பு

(சென்னை)

இலங்கையில் போரினால் பாதிக்கப்பட்டுள்ள தமிழர்களுக்கு உதவுவதற்காக காங்கிரஸ் சார்பில் இன்று வியாழக்கிழமை தமிழ்நாடு முழுவதும் நிவாரண பொருட்கள் திரட்டப்படும் என காங்கிரஸ் கட்சி தமிழ் மாநில செயலாளர் தங்கபாலு தெரிவித்துள் ளார்.

சென்னையில் பத்திரிகையாளர்கள் சந்திப்பில் அவர் கூறியதாவது,

இலங்கை தமிழர்களுக்காக திரட்டப்படும் நிவாரண உதவிகள் அனைத்தும் 15ஆம் திகதி சத்தியமூர்த்தி பவனுக்கு வந்து சேரும் சேகரிக்கப்பட்ட பொருட்கள் அனைத்தும் செஞ்சிலுவைச் சங்கம் மற்றும் ஐ.நா.சபை மூலம் இலங்கை தமிழர்களுக்கு வழங்க ஏற்பாடு செய்யப்படும். இலங்கை தமிழர்களுக்கு என்னென்ன உதவிகள் செய்ய முடியுமோ அனைத்தையும் காங்கிரஸ் தொடர்ந்து செய்து வருகிறது. நிவாரண உதவிகளாக புதிய வேட்டி, சேலை, பால்பவுடர், அரிசி, பருப்பு ஆகியவை திரட்டப்படும் என்றார். (ஓ-6)

# மழை திருவிளையாடல்

# சேவாக்-காம்பீரின் அதிரடியில் இந்தியா தொடரை தனதாக்கியது

## சொந்த மண்ணில் நியூசிலாந்திற்கு மூன்றாவது தோல்வி

(ஹமில்டன்)

சேவாக்-காம்பீரின் அதிரடியான இணைப்பாட்டத்தின் மூலம் நான்காவது ஒருநாள் போட்டியிலும் இந்திய அணி டக் வேத் லூயிஸ் முறையில் 84 ஓட்டங்கள் வித்தியாசத்தில் வெற்றிபெற்றது.

இதன் மூலம் நியூசிலாந்து மண்ணில் முதன் முறையாக ஒரு நாள் தொடரை வென்று தோனி தலைமையிலான இந்திய அணி சாதனை படைத்தது.

நியூசிலாந்திற்கு சுற்றுப்பயணம் மேற்கொண்டுள்ள இந்திய அணி 2 இருபது-20,5 ஒருநாள் மற்றும் 3 டெஸ்ட் போட்டிகள் கொண்ட தொடரில் விளையாடுகின்றது.

இதில் இருபது-20 தொடரை நியூசிலாந்து அணி 2:0 என்ற கணக்கில் கைப்பற்றிய நிலையில் தொடர்ந்து நடைபெற்ற ஒரு நாள் தொடரின் முதல் மூன்று போட்டி களில் இரண்டில் வெற்றிபெற்று இந்திய அணி 2:0 என்ற கணக்கில் முன்னிலையிலிருந்தது.

இந்நிலையில் நான்காவது ஒரு நாள் போட்டி நேற்று ஹமில்டனில் பகலிரவு ஆட்டமாக நடை பெற்றது.

இப் போட்டியில் நாணயச்சுழற்சியில் வெற்றிபெற்று முதலில் துடுப்பெடுத்தாடிய நியூசிலாந்து அணி ரைடர்-மக்குலம் ஜோடியின் சிறப்பான ஆரம்ப இணைப்பாட்டத் தின் மூலம் 18 ஓவர்களில் 100 ஓட்டங்களை எடுத்தது.

எனினும் நியூசிலாந்து அணி 19.1 ஓவர்களில் 102 ஓட்டங்களை எடுத்த போது ரைடர் 46 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தார்.

தொடர்ந்து களமிறங்கிய ரோஸ் [illegible]லர் 5 ஓட்டங்களுடன் ஆட்டமிழக்க நியூசிலாந்து அணி 22.5 ஓவர்களில் 114 ஓட்டங்களை எடுத்து 2 விக்கெட்டையிழந்தது.



அடுத்து குப்தில் களமிறங்க மறு முனையில் சிறப்பாக துடுப்பெடுத்தாடிய பிரண்டன் மக்குலம் 95 பந்துகளில் (7பவுண்டரிகள்,2 சிக்ஸர்கள் அடங்கலாக) 77 ஓட்டங்களை எடுத்து ஆட்டமிழந்தார்.

தொடர்ந்து ஜேக்கப் ஓரம் 1,குப்தில் 25 ஓட்டங்களுடன் அடுத்தடுத்து ஆட்டமிழக்க நியூசிலாந்து அணி 36.5 ஓவர்களில் 175 ஓட்டங்களை மாத்திரமெடுத்து 5 விக்கெட்டுக்களையிழந்தது.

**மழையின் குறுக்கீடு**

எனினும் தொடர்ந்து இணைந்த மக்கிவேசன்-எலியோற் ஜோடி சிறப்பாக துடுப்பெடுத்தாட நியூசிலாந்து அணி 41.3 ஓவர்களில் 5 விக்கெட்டுக்களையிழந்து 209 ஓட்டங்களை எடுத்த போது மழை காரணமாக ஆட்டம் சிறிது நேரம் தடைப்பட்டது.

பின்னர் ஆட்டம் ஆரம்பமாகி 43.2 ஓவர்கள்வரை விளையாடிய நிலையில் மீண்டும் மழையின் குறுக்கீட்டால் போட்டி அரை மணி நேரம் தடைப்பட்டது.

இதனால் மீண்டும் ஆட்டம் ஆரம்பமாகிய போது போட்டி இரு அணிகளுக்கும் தலா 47 ஓவர்களாக குறைக்கப்பட்டது.

இந்நிலையில் நியூசிலாந்து அணி 47 ஓவர்கள் நிறைவில் 5 விக்கெட்டுக்களையிழந்து 270 ஓட்டங்களை எடுத்தது.

இதில் மக்கிலேசன் 42 பந்துகளில் (6 பவுண்டரிகள், ஒரு சிக்ஸர் அடங்கலாக) 56 ஓட்டங்களையும் எலியோற் 27 பந்துகளில் (3 பவுண்டரிகள், ஒரு சிக்ஸர்கள் அடங்கலாக) 35 ஓட்டங்களையும் ஆட்ட மிழக்காமல் எடுத்தனர்.

பந்துவீச்சில் இஷாந் சர்மா 2 விக்கெட்டுக்களையும் சகீர்கான், யுவராஜ் சிங் மற்றும் யூசுப்பதான், ஆகியோர் தலா ஒரு விக்கெட்டையும் வீழ்த்தினர்.

**சேவாக்-காம்பீர் ரன்னில்; பொழிந்த நிஜ மழை**

பதிலுக்கு 47 ஓவர்களில் 271 ஓட்டங்களை எடுத்தால் வெற்றி என்ற இலக்குடன் துடுப்பெடுத் தாடிய இந்திய அணி; சேவாக்-காம்பீர் ஜோடியின் அதிரடியில் ஆரம்பத்தின் மூலம் 10 ஓவர்களில் 83 ஓட்டங்களை குவித்தது.

இந்நிலையில் மழை குறுக்கீடு செய்ததால் ஆட்டம் ஒரு மணி நேரம் தடைப்பட்டது.

இதனால் மழைவிட மீண்டும் ஆட்டம் ஆரம்பமாகிய போது இந்திய அணிக்கு வெற்றி இலக்கு டக் வேத் லூயிஸ் முறையில் 43 ஓவர்களில் 263 ஓட்டங்கள் என நிர்ணயிக்கப்பட்டது.

இந்நிலையில் தொடர்ந்து துடுப்பெடுத்தாடிய இந்திய அணிக்கு சேவாக்கின் அதிரடி சதத்தின் மூலம் 19.2 ஓவர்களில் விக்கெட் இழப்பின்றி 169 ஓட்டங்களை எடுத்தது.

மீண்டும் மழை குறுக்கிட்டதால் ஆட்டம் சிறிது நேரம் தடைப்பட்டு மீண்டும் ஆரம்பமானது.

அப்போது இந்திய அணிக்கு வெற்றி இலக்காக டக் வேத் லூயிஸ் முறையில் 36 ஓவர்களில் 220 ஓட்டங்கள் என நிர்ணயிக்கப்பட்டது.

இந்நிலையில் இந்திய அணி 23.3 ஓவர்களில் விக்கெட் இழப்பின்றி 201 ஓட்டங்களை எடுத்த போது மீண்டும் மழை பெய்ய ஆரம்பித்தது. இதனால் ஆட்டம் தடைப்பட்டது.

எனினும் மழை தொடர்ந்து பெய்ய போட்டியில் டக் வேத் லூயிஸ் முறையில் இந்திய அணி 84 ஓட்டங்கள் வித்தியாசத்தில் வெற்றிபெற்றதாக அறிவிக்கப்பட் டது.

இதில் வீரேந்திர சேவாக் 74 பந்துகளில் (14 பவுண்டரிகள்,6 சிக்ஸர்கள் அடங்கலாக) 125 ஓட்டங்களையும் காம்பீர் 67 பந்துகளில் (6 பவுண்டரிகள் அடங்கலாக) 63 ஓட்டங்களையும் ஆட்டமிழக்காமல் குவித்தனர். ஆட்ட நாயகனாக சேவாக் தெரிவானார்.

**சாதனை**

இவ் வெற்றியின் மூலம் இந்திய அணி 5 போட்டிகள் கொண்ட ஒரு நாள் தொடரை 3:0 என்ற கணக்கில் தனதாக்கியது.

இதன் மூலம் நியூசிலாந்து மண்ணில் இந்திய அணி தனது முதலாவது ஒருநாள் தொடரை கைப்பற்றியது.

## இலங்கை அணியின் தலைவரானார் சங்கக்கார

இலங்கை கிரிக்கெட் அணியின் புதிய தலைவராக குமார் சங்கக்கார நியமிக்கப்பட்டுள்ளார்.

31 வயதுடைய இலங்கை துடுப்பாட்ட வீரரும் விக்கெட்காப்பாளர் குமார் சங்கக்கார 2000ஆம் ஆண்டு தென்னாபிரிக்காவுக்கு எதிரான டெஸ்ட் சர்வதெச தொடரில் கிரிகெட் அரங்கிற்கு நுழைந்து 2006ஆம் ஆண்டு முதல் இலங்கை அணியில் துணைத்தலைவராக செயற்பட்டார். அந்நிலையில் பாகிஸ்தான் டெஸ்ட் தொடருடன் அணித் தலை வர் பொறுப்பை மஹேல ஜெயவர்த்தனா இராஜினாமா செய்த தனையடுத்து குமார் சங்கக் கார அணித் தலைவராக நியமிக் கப்பட்டுள்ளார். அணித்தலைவர் சங்கக்கார வின் முதலாவது தொட ராக எதிர் வரும் யூன் 12ஆம் திகதி முதல் 21 ஆம் திகதி வரை இங்கிலாந் தில் நடைபெறும் இரண்டாவது இரு ஐபது-20 கிரிக்கெட் உலகக் கிண்ண சுற்றுப் போட்டி அமைகின்றது. இதே வேளை இலங்கை அணியில் துணைத் தலைவராக முத்தையா முரளிதரன் தெரிவு செய்யப்பட்டுள்ளார். (5)

## சுழல் நாயகன் முரளியின் சாதனைப் பயணம்... 31





தென்னாபிரிக்காவிற்கான தொடரையடுத்து இலங்கை அணி மூன்று மாத இடைவெளியின்பின் 1995 ஆம் ஆண்டு மார்ச்சில் நியூசிலாந்திற்கு சுற்றுப் பயணம் மேற்கொண்டு 2 டெஸ்ட்,3 ஒருநாள் தொடரில் விளையாடியது.

இதில் முதலாவது டெஸ்ட் 1995ஆம் ஆண்டு மார்ச் 11ஆம் திகதி நேபியரில் ஆரம்பமானது.

இப் போட்டியில் நாணயச்சுழற்சியில் வெற்றி பெற்ற நியூசிலாந்து அணி முதலில் களத்தடுப்பை தீர்மானித்தது.

இதனடிப்படையில் முதலில் துடுப்பெடுத்தாடிய இலங்கை அணி முதல் இன்னிங்ஸில் 183 ஓட்டங்களை மாத்திரமெடுத்து சகல விக்கெட்டுக்களையுமிழந்தது.

இதில் முரளிதரன் 6 பந்துகளில் ஒரு பவுண்டரி அடங்கலாக 8 ஓட்டங்களை எடுத்து ஆட்டமிழந்தார்.

தொடர்ந்து தனது முதலாவது இன்னிங்ஸில் துடுப்பெடுத்தாடிய நியூசிலாந்து அணி 109 ஓட்டங்களை மாத்திரமெடுத்து சகல விக்கெட்டுக்களையுமிழந்தது.


நியூசிலாந்து ஆடுகளங்கள் வேகப்பந்து வீச்சிற்கே சாதகமென்பதால் முரளிதரன் பந்து வீசுவதற்கு வாய்ப்பு கிடைக்கும் முன்பே வேகப்பந்து வீச்சாளர்களான சமிந்த வாஸ் 5,விக்கிரம சிங்க 3 மற்றும் புஷ்பகுமார 2 விக்கெட்டுக்களை சாய்த்தனர்.

தொடர்ந்து முதலாவது இன்னிங்ஸில் 74 ஓட்டங்கள் முன்னிலையில் இலங்கை அணி இரண்டாவது [பாலா]ஸில் துடுப்பெடுத் தாடி 352 ஓட்டங்களை எடுத்து சகல விக்கெட்டுக்களையுமிழந்தது.

இதில் முரளிதரன் 10 பந்துகளில் 10 ஓட்டங்களை ஆட்டமிழக்காமல் எடுத்தார். பதிலுக்கு 427 ஓட்டங்களை எடுத்தால் வெற்றி என்ற இலக்குடன் இரண்டாவது இன்னிங்ஸில் துடுப்பெடுத்தாடிய நியூசிலாந்து அணி வாஸ், முரளியின் சிறப்பான பந்து வீச்சிற்கு ஈடுகொடுக்க முடியாமல் 185 ஓட்டங்களை மாத்திரமெடுத்து 241 ஓட்டங்கள் வித்தியாசத்தில் தோல்வியடைந்தது.

(பயணிக்கும்)

## எண் விளையாட்டு-36




***போட்டிவிதிகள்:*** மேலிருந்து கீழ் தொடங்கும் வெள்ளைக் கட்டங்களில் நிரப்பப்படும் எண்களின் கூட்டுத் தொகை, கட்டங்களின் மேல்புறத்தில் கொடுக்கப்பட்டுள்ள எண்ணுக்கு சமமாக வர வேண்டும்.

இடமிருந்து வலமாக செல்லும் கட்டங்களுக்கும் இதே விதிதான். அக்கட்டங்களுக்கான கூட்டுத் தொகை இடப்புறம் கொடுக்கப்பட்டுள்ளது.

1 முதல் 9 வரையான எண்களை பயன்படுத்த வேண்டும். ஆனால் ஒரு வரிசையில் பயன்படுத்திய எண் திரும்ப வரக்கூடாது.

*நேற்றைய பகுதிக்கான விடை*



# சி.சு.கவின் மத்திய குழுவில் கருணாவுக்கு முக்கிய பொறுப்பு

## ஜனாதிபதி அறிவிப்பு

(கொழும்பு)

ஆயுதம் தாங்கும் துன்பகரமான ஒரு நாடு இனியும் நமக்குவேண்டாம். அமைதி சுபீட்ஷம் சமத்துவத்துடன் அச்சம், சந்தேகமின்றி ஒருதாய் மக்களாக சகல இன மத மக்களும் வாழும் நாட்டை உருவாக்க ஒன்றிணைந்து செயற்படுவோம் என ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ கூறினார்.

நாடாளுமன்ற உறுப்பினர் விநாயக மூர்த்தி முரளிதரன் (கருணா அம்மான்) தேசிய நல்லிணக்கம் மற்றும் ஒருமைப்பாட்டு கபினட் அந்தஸ்தற்ற அமைச்சராக கடந்த திங்கள் அன்று ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ முன்னிலையில் சத்தியப்பிரமாணம் செய்துகொண்ட வைபவத்தில் உரையாற்றியபோதே அவர் இவ்வாறு கூறினார். அலரி மாளிகையில் நடைபெற்ற இவ்வைபவத்தில் ஜனாதிபதி மேலும் கூறியதாவது,

கிழக்கு மாகாணம் தூரமாக இருந்தபோதும் அப்பிரதேச மக்கள் மனதால் எம்முடன் நெருக்கமாகவே உள்ளனர். அதை நான் அறிவேன். வடபகுதி மக்களும் அவ்வாறே உள்ளனர்.

தமிழ் மக்களுக்கு சிறிலங்கா சுதந்திரக் கட்சி புதியதல்ல. ஜனாதிபதி வேட்பாளராகப் போட்டியிட்ட ஹெக்டர் கொப்பேக்கடுவ பெருமளவு வாக்குகளைப் பெற்றதொகுதி யாழ்ப்பாணமே.

சிறிலங்கா சுதந்திரக் கட்சி தமிழ் மக்களுடன் நெருக்கமான கட்சி. கிழக்கு மக்களின் சிறந்த தலைவரான விநாயகமூர்த்தி முரளிதரன் தலைமையில் 2 ஆயிரம் பேர் இக்கட்சியில் இணைந்துள்ளனர்.

இம்மக்களை நாம் மனதார வாழ்த்தி வரவேற்கின்றோம். விநாயகமூர்த்தி முரளிதரனுக்கு சிறிலங்கா சுதந்திரக்கட்சியின் மத்திய குழுவில் முக்கிய பொறுப்பு ஒன்றையும் வழங்க நாம் தீர்மானித்துள்ளோம்.

தற்போது நாட்டின் முற்போக்குக் கட்சிகள், அமைப்புகள் சிறிலங்கா சுதந்திரக் கட்சியுடனேயே இணைந்து கொண்டுள்ளன.

தமிழர், முஸ்லிம், சிங்களவர் என நம் அனைவரதும் தாய்நாடு இலங்கை. இது எமது நாடு. இந்நாட்டில் பயமின்றி, சந்தேகமின்றி வாழ சூழல் ஏற்படுத்தப்படும்.

இதைவிட நமக்கு வேறென்ன வேண்டும். உங்கள் எதிர்காலம் உங்கள் பிள்ளைகளின் எதிர்காலத்தையும் சுபீட்ஷமானதாக நாம் இணைந்து உருவாக்குவோம் எனவும் ஜனாதிபதி மேலும் தெரிவித்தார். (ச-5)

# யுத்த வலயங்களிலிருந்து...

போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

நாள்தோறும் அதிக எண்ணிக்கையிலான மக்கள் கொல்லப்படுவதாகவும் எனினும் இந்தத் தகவல்கள் உறுதிப்படுத்தப்படுவதில்லை எனவும் அவர் குறிப்பிட்டார்.

யுத்தத்தினால் இடம்பெயர்ந்து இடைத்தங்கல் முகாம்களில் தங்கவைக்கப்பட்டுள்ள மக்கள் சுதந்திரமாக இடம்பெயர அனுமதியளிக்கப்படவேண்டும் எனவும் அவர் வலியுறுத்தியுள்ளார்.

இடைத்தங்கல் முகாம்களின் நிலைமை குறித்து தீவிரமாக ஆராயப்பட்டதன் பின்னரே ஐக்கிய நாடுகள் அமைப்பு தொடர்ச்சியாக நீண்டகால உதவிகளை வழங்கும் எனவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

அதேவேளை வன்னியில் இடம்பெற்று வரும் உக்கிர மோதல்களில் பொதுமக்களின் உயிரிழப்புக்கள் குறித்து உன்னிப்பாக அவதானித்து வருவதாக ஐக்கிய நாடுகள் அமைப்பின் பொதுச் செயலாளர் பான் கீ மூன் தெரிவித்துள்ளார்.

இலங்கையில் இடம்பெற்றுவரும் மனித பேரவலம் குறித்து ஐக்கிய நாடுகள் அமைப்பு கூர்ந்து கவனித்து வருவதாகவும் பொதுச் செயலாளர் பான் கீ மூனின் பேச்சாளர் குறிப்பிட்டுள்ளார்.

தொடர்ந்தும் இவ்வாறான இழப்புக்களுக்கு வழியமைக்காது உடனடியாக இந்தப் பிரச்சினைக்குத் தீர்வு காணப்பட வேண்டும் எனவும் அவர் வலியுறுத்தியுள்ளார்.

ஆயுதங்களைக் களையுமாறும் மோதல் பிரதேசங்களிலிருந்து மக்கள் வெளியேற உதவுமாறும் அவர் விடுதலைப் புலிகளிடம் கோரிக்கை விடுத்துள்ளார். (ச-5)

# புலிகளின் கரும்புலி...

வருகின்றனர். ஆனால் அவற்றை முறியடித்தவாறு படையினர் மேலும் முன் நகர்ந்து வருகின்றனர் என்றும் அவர் கூறினார்.

மோதல்கள் தொடர்பில் இராணுவப் பேச்சாளர் தொடர்ந்தும் கூறியதாவது,

புதுக்குடியிருப்பு பிரதேசத்தை கைப்பற்றுவதற்காக இராணுவத்தின் 53,55 மற்றும் 58-வது படையணியினர் தீவிர முன்னேற்ற முயற்சிகளில் ஈடுபட்டு வருகின்றனர்.

விடுதலைப் புலி உறுப்பினர்கள் தற்போது சுமார் 37 சதுர கிலோமீற்றர் நிலப்பரப்புக்குள் முடக்கப்பட்டுள்ளனர். புதுக்குடியிருப்பிலுள்ள தமது நிலைகளை தக்க வைத்துக் கொள்வதற்காக புலிகள் பலத்த எதிர்த்தாக்குதல்களை நடத்தி வருகின்றனர்.

படையினர் இந்த நடவடிக்கைகளை முறியடித்து வருகின்றனர்.

அதேவேளை கரும்புலி உறுப்பினர்கள் ஊடுருவி தாக்குதல்லை நடத்தி வருகின்றனர். இந்த ஊடுருவத் தாக்குதல்களில் புலிகள் இயக்கத்தின் சுமார் 400 பேர் வரை ஈடுபட்டுள்ளதுடன் அவ்வியக்கத்தின் முக்கியஸ்தர்களான லோரன்ஸ் மற்றும் சொர்ணம் ஆகியோரும் பங்களிப்பு வழங்கியுள்ளனர்.

படையினரின் பதில் தாக்குதல்களையடுத்து பலத்த இழப்புக்களுடன் புலிகள் பின் நகர்ந்துள்ளனர் என்றார். (ச-5)

# பீரங்கி தளத்தை கைப்பற்றி...

போக்குவரத்துக்கள் நிறுத்தப்பட்டுள்ளன.

விடுதலைப் புலிகளால் கைப்பற்றப்பட்ட பிரதேசங்களை மீள கைப்பற்ற முடியாத நிலையில் 58-வது டிவிசன் படையணி உள்ளது.

படையினரின் பிரதேசத்திற்குள் 12 கிலோமீற்றர் தூரம் வரை ஊடுருவிய விடுதலைப் புலிகளின் அணிகள் கிளிநொச்சிக்கு அண்மையாக இருந்த பீரங்கித் தளத்தை கைப்பற்றியுள்ளனர்.

அங்கிருந்த 130 மி.மீ பீரங்கிகள் மூன்றை கைப்பற்றி அதனைக் கொண்டும் தாக்குதல்களை நடத்தியுள்ளனர்.

கடந்த சனிக்கிழமை மட்டும் நடைபெற்ற மோதல்களில் 200 படையினர் களமுனையில் இருந்து அகற்றப்பட்டுள்ளனர் என அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை முல்லைத்தீவு மாவட்டத்தில் உள்ள விசுவமடு பகுதியில் படையினரின் பாரிய ஆட்லறி பீரங்கித் தளத்தை விடுதலைப் புலிகளின் கரும்புலிகள் படையணியினரும் கேணல் கிட்டு பீரங்கி படையணியினரும் இணைந்து தாக்கியழித்துவிட்டு தளம் திரும்பியுள்ளதாக விடுதலைப் புலிகள் அறிவித்துள்ளதாக ரொய்ட்டர் செய்தியில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (எ-1)

# தெற்கின் பயங்கரவாத சம்...

பாதுகாப்பு வழங்குவது தொடர்பிலும் மக்கள் சமய நிகழ்வுகளை எவ்வாறு நிகழ்த்த வேண்டும் என்பது தொடர் பிலும் விசேட நடவடிக்கைகள் எடுக்கப்பட வுள்ளன.

### ஏ-9 பாதை திறப்பு

கடந்த 25 வருடங்களுக்குப் பின்னர் ஏ-9 பாதை திறக்கப்பட்டுள்ளது. ஆரம்பக் கட்டமாக ஏ-9 வீதியூடாக மோதல்களினால் பாதிக்கப்பட்ட மக்களுக்கான அத்தியாவசிய உணவு மற்றும் ஏனைய பொருட்கள் அனுப்பி வைக்கப்பட்டுள்ளன.

இதனால் யாழ்ப்பாணத்தில் பொருட்களின் விலை குறைய வாய்ப்புள்ளது. அதேவேளை அங்கு உற்பத்தியாகும் பொருட்களை இங்கு கொண்டுவரவும் நடவடிக்கை எடுக்கப்படும்.

விநாயகமூர்த்தி முரளிதரன் அரசுடன் இணைந்துள்ளார். பல தமிழ் மக்கள் இன்று அரசுடன் இணைந்துள்ளனர். இதனூடாக கட்சியில் இன ஒருமைப்பாடு நிலவுவதைக் காணமுடிகிறது என்றார்.

### ஐ.நா. செயலர் பான் கீ மூனின் அறிக்கை

மோதல்களினால் இடம்பெயர்ந்துள்ள மக்களின் பாதுகாப்புக்குறித்து உன்னிப்பாக அவதானித்து வருவதாக ஐக்கிய நாடுகள் அமைப்பின் பொதுச் செயலர் பான் கீ மூன் தெரிவித்துள்ளார்.

அவர் விடுதலைப் புலிகளிடம் ஆயுதங்களைக் கீழே வைக்குமாறு வேண்டுகோள் விடுத்துள்ளார். இதிலிருந்து சர்வதேச அமைப்புக்கள் மக்களின் பாதுகாப்புத் தொடர்பில் அதிக அக்கறை கொண்டுள்ளன. பல அறிக்கைகளும் விடுக்கப்பட்டுள்ளன.

மக்களை விடுவிக்குமாறு அவர் இரண்டாவது தடவையாகவும் வலியுறுத்தியுள்ளார்.

விடுதலைப் புலிகள் மக்களை தடுத்து வைத்துள்ளார்கள் என்ற கூற்றை சர்வதேச சமூகம் ஏற்றுக் கொண்டுள்ளது. மக்களுக்கு பாதிப்பு ஏற்படாத வகையிலேயே படை நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

படையினர் பாரிய ஆயுதங்களைப் பயன்படுத்தவில்லை. புலிகளின் கட்டுப்பாட்டிலுள்ள மக்களை விடுவிக்க பல நடவடிக்கைகளை அரசு மேற்கொள்ளும். இவ்வாறு அவர் தெரிவித்தார். (ச-5)

# மரண வீடாகக் காட்சி தரும்...

விபரித்துள்ளார்.

கண்மூடித்தனமான ஷெல் தாக்குதல்களில் படுகாயமடையும் அப்பாவி பொதுமக்களுக்கு மாத்தளன் மருத்துவமனையில் பணியாற்றிவரும் மருத்துவரான இவர், அவுஸ்திரேலிய தமிழ் ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தில் நேற்று முன்தினம் ஒலிபரப்பாகிய செய்தி அலைகள் நிகழ்ச்சிக்கு வழங்கிய நேர்காணலில் இதனைத் தெரிவித்துள்ளார்.

அந்த நேர்காணலில் கூறப்பட்ட முக்கியமான விடயங்கள் வருமாறு,

தாக்குதலில் படுகாயமடைந்து மருத்துவமனைக்குக் கொண்டுவரப்படும் மக்களுக்கு எங்களிடமுள்ள வசதிகளை வைத்தே சிகிச்சையளித்து வருகிறோம்.

எனினும் படுகாயமடைவோரின் எண்ணிக்கை அதிகமாக இருப்பதால் எங்களால் இந்த சிகிச்சையை தொடர்ந்தும் வழங்க முடியாத நிலையே காணப்படுகிறது.

கடந்த ஒரு மாதகாலமாக எறிகணைகளில் காயமடைந்தவர்கள் இந்த மருத்துவமனைக்கு கொண்டுவரப்படுகின்றனர்.

குறிப்பாக கடுமையான காயமடைந்தவர்கள் அல்லது உயிர்போகும் தருணத்தில் இருப்பவர்களை அவர்களுடைய உறவினர்கள் இந்த மருத்துவமனைக்குக் கொண்டு வருகின்றனர்.

அவ்வாறு கொண்டுவரப்படும் பொழுது சிலர் வழியிலேயே இறந்துவிடுகின்றனர். சிலர் சிகிச்சை பலனின்றி இறந்து விடுகின்றனர்.

மக்கள் இங்கு நெரிசலாக இருக்கின்ற காரணத்தால் எறிகணைத் தாக்குதல்களில் ஒரே குடும்பத்தைச் சேர்ந்த பலர் இறக்கின்ற சூழல் காணப்படுகின்றது. அத்தகைய சந்தர்ப்பங்களில் அங்கிருக்கும் அயலவர்கள் அல்லது எஞ்சியிருப்போர் அந்தந்த இடங்களிலேயே அவர்களது உடல்களைப் புதைத்து விடுகின்றனர்.

எனவே மருத்துவமனைக்கு குறைந்தளவிலான இறந்த உடலங்களே வந்து சேர்கின்றன.

மிகக் கடுமையாக காயமடைந்து இரத்தப்போக்கு ஏற்பட்டவர்களுக்கு எங்களால் சிகிச்சையளிக்க முடியாத நிலை காணப்படுகிறது.

நாங்கள் பார்த்துக்கொண்டிருக்கும் போதே அவர்கள் இறக்கும் ஒரு அவல நிலை காணப்படுகின்றது. சிகிச்சை பலனின்றி பலர் இறக்கும் நிலையே இங்குள்ளது. இது துரதிர்ஷ்டவசமானது.

தற்போது காயமடைந்த நிலையில் 500க்கும் அதிகமானவர்கள் இங்குள்ளனர். அனைத்துலக செஞ்சிலுவைச் சங்கக் கப்பல் வந்தால்இவர்களை நாங்கள் மேலதிக சிகிச்சைக்காக அனுப்பி வைப்போம். இல்லையேல் கடுமையான காயமடைந்தவர்களில் ஒரு சிலர் இறக்கக் கூடும்.

இந்த சூழ்நிலையைச் சமாளிப்பதற்கு நாங்கள் கேட்கும் உதவிகளை அரசாங்கம் உடனடியாக எங்களுக்கு அனுப்பிவைக்க வேண்டும். இல்லையேல் மேற்கூறிய நிலை ஏற்படுவதைத் தடுக்க முடியாது.

கடந்த முதலாம் திகதி தொடக்கம் பத்து நாட்களுக்குள் ஆயிரத்துக்கும் அதிகமானோர் படுகாயமடைந்த நிலையில் மருத்துவமனைக்கு கொண்டுவரப்பட்டுள்ளனர்.

இவ்வளவு எண்ணிக்கையான மக்கள் காயமடைந்தநிலையில் கொண்டுவரப்படுவார்கள் என்பதை நாங்கள் எதிர்பார்த்திருக்கவில்லை. எனினும் நாங்கள் எமது சேவையை வழங்குகிறோம். எங்களால் முடிந்தவரை எங்களிடமுள்ள வளங்களைப் பயன்படுத்தி நர்ங்கள் இவர்களுக்கு மருத்துவ சேவையை வழங்கி வருகின்றோம்.

இங்கு கடுமையாக மழை பெய்து கொண்டிருப்பதால் மருத்துவமனையின் தற்காலிக கட்டடங்களில் நீர் புகுந்துள்ளது. காயமடைந்த மக்கள் இதனால் மிகுந்த சிரமங்களை எதிர்கொண்டுள்ளனர்.

அதனை விட இடம்பெயர்ந்துள்ள மக்களும் மழை வெள்ளத்தினால் கடுமையாகப் பாதிக்கப்பட்டுள்ளனர்.

கடந்த முதலாம் திகதி தொடக்கம் 7ஆம் திகதி வரையிலான காலப்பகுதியில் காயமடைந்த 700க்கும் அதிகமானோரில் 137 சிறுவர்களும் அடங்குகின்றனர். அவர்களில் 32 சிறுவர்கள் இறந்துள்ளனர்.

கடந்த 10 நாட்களில் மட்டும் 50க்கும் அதிகமான சிறுவர்கள் கொல்லப்பட்டுள்ளனர். 200க்கும் அதிகமான சிறுவர்கள் காயமடைந்துள்ளனர்.

இதைவிட மழை வெள்ளம், வயிற்றோட்டம், போஷாக்கின்மை போன்றவற்றாலும் சிறுவர்கள் இறந்து கொண்டிருக்கின்றனர். இப்படி பல நூற்றுக்கணக்கான சிறுவர்கள் மடியக் கூடிய அவல நிலையை நாங்கள் அடைந்திருக்கின்றோம்.

24 மணிநேரமும் மருத்துவமனையில் இறந்த உடலங்கள் இருந்த வண்ணமே இருக்கின்றன. உறவினர்கள் 24 மணிநேரமும் அங்கிருந்து அழுது குளறியபடியே உள்ளனர்.

24 மணிநேரமும் அது மரண வீடாகவே காட்சி தருகிறது. மருத்துவமனையின் பிற பகுதிகளிலும் உறவினர்களின் ஒப்பாரியே கேட்கிறது. இத்தகைய சூழ்நிலையில் மருத்துவமனைப் பணியாளர்கள் கல் நெஞ்சம் படைத்தவர்களாகவே கடமையாற்ற வேண்டியுள்ளது.

இரண்டு மாதங்களுக்கு முன்னரே எங்களிடமிருந்த மருத்துக் கையிருப்புகள் முடிந்து விட்டன. அதன் பின்னர் எங்களிடம் கையில் கிடைப்பதை வைத்தே சிகிச்சையளித்து வருகிறோம். சம்பந்தப்பட்ட அமைச்சு மற்றும் உயர் அதிகாரிகளுக்கு இது குறித்து தெளிவாக கூறியிருக்கிறோம்.

இது மருத்துவமனை என்று கூறப்படினும் இங்கு மருத்துவமனைக்குரிய எந்தக் கட்டமைப்பும் இல்லை என்றார். (ச-5)

# பொது விழாக்களை...

பொதுமக்கள் பெரும் எண்ணிக்கையில் கலந்து கொள்ளும் வைபவங்கள், அனைத்துக்கும் பாதுகாப்பு அமைச்சின் அனுமதி பெறப்படவேண்டும் என அரசாங்கம் கூறியுள்ளது.

தேசிய பாதுகாப்புத் தொடர்பான ஊடக மத்திய நிலையத்தின் பணிப்பாளர் லக்ஷ்மன் ஹுலுகல்ல இது தொடர்பாக அறிக்கை ஒன்றை வெளியிட்டுள்ளார்.

நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை தெற்கு நகரான மாத்தறையில் இஸ்லாமியர்கள் ஒழுங்கு செய்திருந்த விழா ஒன்றில் நடைபெற்ற குண்டுத் தாக்குதலில் பலர் கொல்லப்பட்டும் மூத்த அமைச்சர் ஒருவர் படுகாயமடைந்ததைத் தொடர்ந்து அரசாங்கம் இந்த அறிவிப்பை வெளியிட்டுள்ளது.

தேசிய ரீதியில் எடுக்கப்படும் விழாக்கள், சமய நிகழ்வுகள் என்பனவற்றிற்கு இவ்வாறான பாதுகாப்பு அனுமதி பெறப்பட வேண்டும் எனவும் கிராமப் புறங்களில் நடத்தப்படும் விழாக்களுக்கு அப்பகுதியில் உள்ள பொலிஸாரிடம் அனுமதி பெறப்பட வேண்டும் என்றும் அரசாங்கம் தெரிவித்துள்ளது.

கடந்த வருடமும் இதே காலப்பகுதியில் வன்னிப் பகுதியில் அப்பாவி பாடசாலை மாணவர்களை இலக்கு வைத்து படையினரின் ஆழ ஊடுருவும் படையினர் தாக்குதல் நடத்தி பலரை கொன்ற பின்னர் பாடசாலையில் விழாக்கள் எடுக்கும் போது படையினரிடமோ அல்லது பாதுகாப்பு அமைச்சிடமோ அனுமதிபெறவேண்டும் என அறிவுறுத்தியிருந்தமை குறிப்பிடத்தக்கது. (ச-3,5,14)

இப்பத்திரிகை வலம்புரி அன்.கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 12.03.2009இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.